சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 6	இதழ்: 05	அக்டோபர் - 2024	விலை - ரூ.15/
VOL:6	ISSUE: 05	October - 2024	Rs. 15/-





குவலயம் போற்றும், "குதம்பைச் சித்தர்"

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-6 மலர்-05 அக்டோபர்-2024

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே....

உனக்கு நேரும் எல்லா ஆபத்துக் களில் இருந்தும், துயரங்களில் இருந் தும் நீ முழுமையாக காப்பாற்றப் படுவாய். இது என் பிள்ளையாகிய உனக்கு நான் கொடுக்கும் வாக் குறுதி. உன்னை என் பாதைக்கு இழுத்தது நானே! பிறகு ஏன் இந்த அழுகையும், கலக்கமும்.

உனக்கான சோதனை காலம் பல வருடங்களுக்குப் பிறகு இப்போது முடிந்து விட்டது. ஒவ்வொரு கணமும் உன் நம்பிக்கை பொறுமை, நிதானம், அன்பு, பக்தி என அனைத்தையும் நான் சோதித்து விட்டேன்.

அனுதினமும் என்னையே சேவிக் கும் பக்தனின் கூடவே இருந்து காப்பாற்றுவதே என் தர்மம். உன் துயரங்கள் தீர்ந்து, வேண்டி யது நிறைவேறும் நாள் வெகு அரு கிலேயே உள்ளது. என்னுடைய மகா சக்தி பற்றி புரிந்தும் நீ கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

நீ அடுத்தவனுக்கு உதவி செய் யும் நேரம் வந்து விட்டது. பிரிந்து சென்றவர் கூடும் நேரம். உன் உதவி நாடி பலர் வரும் நேரம். நம்பிக்கை கொள்! நிச்சயம் இது நடக்கும். என் வாக்கு ஒருபோதும் பொய்க்காது.

உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உன் விதி முடிவதற்குள் மரணமே உன்னை நெருங்கினாலும் உன் தலை முடியை பிடித்து இழுத்து கொண்டு வருவேன் எதற்காகவும் கலங்காதே. என் நாமத்தை உச்சரி எந்த நேரத்திலும் அப்பா நான் உடனிருக்கிறேன்.

-பகவான் சீரடி சாய்பாபா.



ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் எழுபத்தி ஐந்தாவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா, 15.9.24 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு "சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தில்" (9/1A, பழனியப்பா 2 ஆவது தெரு, அயனாவரம், சென்னை23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இம்மாதம் நமது இதழ் வெளியீட்டு விழா நமது பகவான் சாயிநாதரின் அருளாசியுடன் இரு இடங்களில் நடந்தது. ஆம் வாசகர்களே! திருவாரூர் மாவட்டம் பூந்தோட்டம் சிவசித்தர் ஸ்ரீ சாயிபாபா ஆலயத்தில் நடைபெற்ற ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரின் திருக்கல்யாண உற்சவத்தில் நமது இதழின் 74 வது வெளியீட்டு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

"வாழும் பாபா" சீரடி ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகள் அவர்கள் இம்மாத இதழை வெளியிட, திருமதி. சுனந்தா ஆனந்த் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.



இரண்டாவதாக,நமதுசாய்தியா னாலயா ஆத்ம ஞான பீடம், சென்னையில், இம்மாத இதழை திருமதி. மாதங்கி பாலாஜி அவர் கள் வெளியிட, சாயி பக்தை திருமதி. கௌரி அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவிற்கு வந்திருந்த அனை வருக்கும் சாய் தியானாலயா அன்னதானக் குழுவினர் அன்ன தானம் வழங்கினர். புத்தக வெளி யீட்டை ஒட்டி இல்லா தோருக்கும், இயலாதோருக்கும் அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

இவ்விதழை படிக்கும் அன்பிற் கினிய சாய் சொந்தகள் அனை வரும் சாயிநாதரின் புகழ் பரப் பும் இவ்விதழ் உங்களுக்குப் பிடித் திருந்தால், நீங்கள் படித்து ரசித் திருந்தால், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற் கேற்ப முடிந்தளவிற்கு அடுத்த வருக்கு அறிமுகப் படுத்துங்கள்.

குறைந்தது ஒருவரையாவது,ஒரு வருட சந்தாவாவது சேர்த்துவிடுங் கள். இல்லை என்றால் நீங்கள் படித்து முடித்ததும் அந்தப் புத்தகத் தையாவது ஒரு பாபா பக்தருக்கு வழங்கி படித்துப் பார்க்கக் கூறுங் கள். இதுவும் சாயிநாதருக்கும் நீங்கள் செய்யும் சேவையேயாகும்.

சாயி பக்த வாசகர்கள் குறைந் தது பத்து சந்தாதாரர்களை சேர்த்து விட்டு சாயி சேவை புரிந்தீர்கள் என் றால் அவர்களது சேவையினைப் பாராட்டி நமது இதழ் சார்பாக சான்றிதழ் வழங்கி உங்களைப்பற்றி



புகைப் படத்துடன் நமது இதழில் ஒரு பக்கம் சிறப்புக்கட்டுரை வெளியிடப்படும்.

நமது இதழ் கடந்த ஏழு ஆண்டு களாக தொடர்ந்து வெளிவருவ தற்கு பிரதிபலன் பாராது தொடர்ந்து பலவகையில் உதவி வரும்

"பாராயணப்பகலவன்" திரு. சுந்தர்சாய், திரு.பா.செந்தில் குமார் ஆகியோருக்கு மனப்பூர்வமாக எமது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேபோல் செல்லும் இடங் களில் எல்லாம் நமது இதழைப் பற்றி கூறி, தமிழ்நாட்டின் மூலை முடுக்கில் எல்லாம் நமது இதழ் சென்றடைய வேண்டும் என்று எப்போதும் நமக்கும், நமது இதழுக் காகவும் பிரார்த்தனை செய்து வரும், " பிரார்த்தனைச் செம்மல்" திரு கலியன் சாய் அவர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியினை சமர்ப்பிக்கின்றோம்.

இதுவரை நமது இதழுக்கென சந்தாதாரர்களை இணைத்து சாயி சேவை புரிந்த அனைத்து சாயி சேவ கர்களுக்கும் பகவான் சாயி நாதரின் பரிபூரண ஆசிகள் கிடைத்து வாழ்வில் மேன்மேலும் பல வெற்றிகளைப் பெற்று வாழ்க வளமுடன் என வாழ்த்தி மகிழ் கின்றோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்ச மின்றி ஆரோக்கியத்துடன், மன நிம்மதியுடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

– அன்புடன் ஆசிரியர்.

ஓம் சாய்ராம்.

நலமுடன் வாழ்வோம்



சாய் அன்பர்கள் அனைவருக்கும் வணக்கம்! நமது அன்றாட வாழ்வில் அல்லல்கள் அனேகம். கோடிப் பிரட்சனைகள் இருப்பினும் தீர்வு ஆன்மீக வாழ்வில் மட்டுமே உள்ளது. என்பது ஆண்டுகள் ஸ்தூல உடலுடன் வாழ்ந்து, இன்றளவும் நமக்கெல்லாம வழித்துனையாய் வலம்வரும் பிரபஞ்ச மகா சக்தி ஸ்ரீ சாயி மகராஜ் நமக்களித் ஓர் எளிய மகா மந்திரம்...

" ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

மிக எளிமையான இம்மந்திரத்தை எழுதிக்கொண்டே ஜபிப்போமானால் நம் தலையெழுத்தையே மாற்றி அமைக்க வல்லது.**'லிகித'** என்றால் எழுதுவது "இந்த லிகித நாம ஜபத்"தை தினமும் 108 முறை உச்சரித்துக் கொண்டே எழுதி, நம் கர்மவினையின் தாக்கத்தை முறியடிப்போம் வாரீர்.

ஆர்வத்துடனும், பக்தியுடனும், எழுத, எழுத பிரபஞ்ச மஹா சக்தியானது பேரருளாய் மலர்ந்து நம் வாழ்வினில் மன நிம்மதியையும், முன்னேற்றத்தையும் வழங்கும். என்றென்றும் குருவருள் திருவருளாய் திகழ்ந்திட சாயிநாமம் சொல்லிக் கொண்டே வாழ்வில் வளம் பெருவோம்

எக்கும் சாய்! எதிலும் சாய்!

எல்லாமே சாய்! குருவே துணை!

<u>விபரங்களுக்கு:</u>

"பாராயணப் பகலவன்"

திரு. சுந்தர்சாய், 9789404451

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

மதுரையைச் சேர்ந்த சாய் பக்தை திருமதி. லோகேஸ்வரி கார்த்திக் அவர்கள் தன்னுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த சாயி லீலையை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.

என்னுடைய பெயர் லோகேஸ்வரி எனது வாழ்க்கையில் சீரடி சாய்பாபா மற்றும் எனது குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் வந்த பிறகு நடந்த அற்புதங்கள், மற்றும் அதியங்களை உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றேன்.



எனக்கு திருமணமாகி நான்கு வருடங்கள் ஆகின்றன. என் திருமணத்திற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு தான் சாய்பாபாவைப் பற்றி தெரிய வந்தது. சாய்பாபா எனது வாழ்வில் வந்த பிறகு தான் எனக்கு நிறைய நல்ல மாற்றங்கள் நிகழ்ந்தன. எனக்கு திருமணம் ஆன பின்பு, எனது திருமண வாழ்க்கையில் ஒரு சில கசப்பான சம்பவங்கள் நிகழ ஆரம்பித்தன.

அப்போதுதான் சாய்பாபாவே நேரில் வந்தது போல் எனது குரு ஸ்ரீராம் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. நல்லவேலையாக அவரின் சரியான ஆலோசனையினால் எனது திருமண வாழ்க்கையில் ஏற்பட்ட சிக்கல்களை நானும், என் கணவரும் சரி செய்து கொண்டோம். அதன்பின் பாபாவிடம் இருந்தும், எனது குருவிடம் இருந்தும் எனக்கு கிடைத்த அதிசயங்கள், அற்புதங்கள், ஆசிர்வாதங்கள் என சொல்லிக் கொண்டே போகலாம்.

எனக்குத்

திருமணமாகி மூன்று மாதங்களுக்கு பின் நான் கர்ப்பம் தரித்தேன். கர்ப்பம் தரித்த நான்கு மாதத்தில் கரு கலைந்துவிட்டது. அச்சமயம் நான் மிகவும் மனமுடைந்து போனேன். அதன் பின் குரு ஸ்ரீராம் அவர்களைப் பற்றி நான் முழுமையாக தெரிந்து கொண்டேன்.

முதன் முறையாக நான் அவரை நேரில் சந்தித்து பேசிய போது, அவர் என்னிடம் சொன்ன விஷயம் என்ன வென்றால், நீ இழந்ததைப் பற்றி கவலைப்படாதே, கூடிய விரைவில் சாய் பாபாவின் ஆசியுடன் உனக்கு அழகான மற்றும், அறிவான ஒரு குழந்தை கிடைக்கும் என்று கூறினார்.

அதுதான் எனக்கு அவரிட மிருந்து கிடைத்த முதல் ஆசீர் வாதம். சாய் பாபாவே நேரில் வந்து கூறியது போல் தோன்றியது. அன்றிலிருந்தே எனக்கு சாய்பாபா மற்றும் குரு இருவரும் வேறில்லை ஒருவர்தான் என்று அறிந்து கொண்டேன். அதன்பின் சாய்பாபாவை வணங்குவதைப் போலவே குருவையும் மனதளவில் வணங்க ஆரம்பித்துவிட்டேன்.

பிறகு ஒரு சில மாதங்களுக்கு பின்பு எனக்கு குரு ஸ்ரீராம் அவர் களுடன் சீரடி புனித யாத்திரை செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு எனக்கு நிகழ்ந்த அற்புதங்கள் என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்று. என் மொத்த வாழ்நாளிலும் எனக்கு மிகவும் பிடித்த சந்தோஷ மான மறக்க முடியாத நாட்கள் என்றால் நான் சீரடி சென்றது தான்.



- ஜெயந்தி ஸ்ரீராம்

சீரடியில் ஒரு நாள் அதிகாலையில் பாபாவின் சன்னதிக்கு முன்பு அனைவரும் தியானம் செய்ய ஏற்பாடு செய்திருந்தார் குரு அவர்கள்.

தியானம் முடிந்த பிறகு குரு அவர்கள், வரிசையாக ஒவ்வொரு வருக்காக வாக்கு கூறி வந்த குரு, என்னை நோக்கி விரைவில் உனக்கு ஆண் குழந்தை பிறக்கப் போகின்றது என்று கூறினார். அந்த வார்த்தை பாபாவின் சன்னதி முன்பு கிடைத்ததே மிகப்பெரிய ஆசிர்வாதமாக எனக்குத் தெரிந்தது.

ஏனென்றால் நான் சீரடி செல்லும் முன்பு சாய்பாபாவிடம் கேட்டது ஒரேயொரு விஷயம் தான். அது என்னவென்றால் எனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க வேண்டும். அந்த குழந்தை கருவில் இருக்கும் பொழுது உங்கள் சன்னதிக்கு வரவேண்டும் என்றும் என்னுடைய குழந்தை கருவில்


இருக்கும் பொழுதே பாபாவின் ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டேன்.

அதே சமயம் குரு அவர்கள் அவ்வாறு கூறியதும் எனக்கு வார்த்தைகளே வரவில்லை. அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. இதில் மீண்டும் ஒரு ஆச்சரியம் அது என்னவென்றால், அன்று மாலையே எனக்கு அறிகுறிகள் தெரிய ஆரம்பித்தது. என்னுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அதன் பின்பு புனித யாத்திரை மிகவும் சிறப்பாக முடிந்து வீட்டிற்கு வந்தவுடன் மருத்துவமனைக்குச் சென்று சோதித்துப் பார்த்தேன். மருத்துவர் நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள் என்று கூறினார். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. நான் பாபாவிடம் வேண்டியது போல் எனக்கு அவரின் ஆசீர்வாதம் கிடைத்ததை எண்ணி ஆனந்தப்பட்டேன்.

அன்றிலிருந்து சாய்பாபாவை எனது குரு ஸ்ரீராம் அவர்களின் உருவத்தில் பார்க்க ஆரம்பித்து விட்டேன். நான் முன்னமே சொன்னது போல் தான் சாய்பாபாவும் குருவும் எனக்கு வெவ்வேறு இல்லை. இருவரும் ஒருவரே! அதன் பின்பு சாய்பாபா வாகிய குருவின் ஆசீர்வாதத்தினால் அழகான, அறிவான ஆண் குழந்தையை பெற்றெடுத்தேன். இவ்வாறாக எனது வாழ்வில் பல சந்தோஷமான விஷயங்கள் நிகழ ஆரம்பித்தது.

மேலும் என்னுடைய குணா



திசயம் என்னவென்றால் ஏதேனும் சின்ன பிரச்சினைகள் வந்தால் கூட நான் அதைப் பற்றியே அதிகமாக யோசித்து கொண்டிருப்பேன். அதிலிருந்து எப்படி வெளியில் வருவது என்று கூட எனக்குத் தெரியாது. எந்த ஒரு குழப்பமோ, பிரச்சனைகளோ வந்தால் நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு விடுவேன்.



ஆனால் என் வாழ்வில் நிகழும் குழப்பங்கள் மற்றும் பிரச்சினைகளை என்று என் குருவிடம் கூற ஆரம்பித்தேனோ அன்றிலிருந்து எனக்கு ஏற்படும் சின்ன சின்ன பிரச்சினைகள் காணாமல் போக ஆரம்பித்தது. என்னுடைய மன நிலையும் தெளிவு பெற ஆரம் பித்தது. ஏதாவது ஒரு கஷ்டமான நிலை வந்தாலும் அதை எவ்வாறு தனியாக கையாளுவது என்று குருவிடம் இருந்து கற்றுக் கொண்டேன்.

இவ்வாறு சாய்பாபாவாகிய குரு அவர்களால் எனது வாழ்க்கையில் நிறைய மனநிம்மதி தரக்கூடிய நிகழ்வுகளாக நடந்தன. அதன் பின் ஏதாவது ஒரு துன்பம் வந்தால் கூட அவை எனக்கு பெரியதாக தெரிய வில்லை. ஏனென்றால் சாய்பாபா வாகிய குரு ஸ்ரீராம் அவர்கள் வாழ்க்கை என்றால் என்ன, நாம் ஒவ்வொருவரும் எந்த நோக்கத்திற்காக இந்த பூமிக்கு வந்துள்ளோம் என்று எனக்கு புரிய வைத்தார்.

அவரது வாக்கு எந்தளவிற்கு பலிக்கும் என்றால் உதாரணத்திற்கு ஒருமுறை நானும், எனது கணவரும் எங்களின் உத்தியோகத்திற்கு வசதியாக அருகில் உள்ள ஊருக்கு வீட்டை மாற்றிக் கொள்ளலாம் என்று யோசித்து அதை என் குருவிடம் கூறி, புது ஊர், புது இடம் எனக்கு சற்று பயமாய் இருக் கின்றது. எங்களுக்கு அது சரியாக வருமா என்று கேட்டபோது,

பயப்படாமல் செல்லுங்கள். எப்போதும் உனக்கு அருகி லேயே இருந்து உன்னை பார்த்துக் கொண்டே இருப்பேன் என்று கூறினார்.

அதுபோலவே, நாங்கள் வீடு பார்த்து குடியேறியதும் எங்கள் வீட்டிற்கு எதிரில் ஏதோ கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தது. பார்ப்பதற்கு கோவில் போல் இருந்ததனால் நான் சென்று என்ன கட்டுகின்றார்கள் என்று விசாரித் தேன். பாபா கோவில் கட்டுவதாக பதில் வந்தது. அப்போது என் குரு கூறிய நான் உனக்கு அருகில் இருந்து பார்த்துக்கொண்டே இருப்பேன் என்ற வாக்கு ஞாபகத்திற்கு வந்தது. என் ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

இன்று பாபா ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு சிறப்பாக குட முழுக்கு நடைபெற்று எனது வீட் டிற்கு எதிரிலேயே பாபா அமர்ந்து எப்போதும் எங்களை கவனித்துக் கொண்டு ஆசீர்வதிக்கின்றார்.

குரு அவர்களின் அறிவுரைகளை என் வாழ்வின் பின்பற்ற ஆரம் பித்தேன். இச்சமயம் வரை எனது வாழ்க்கையில் அமைதியாக பயணித்துக் கொண்டிருக்கிறேன். அனைவருக்கும் பொதுவான விஷயம் ஒன்று அது என்ன வென்றால், நாம் ஏதேனும் ஒரு பிரச்சனைகளையோ அல்லது ஏதேனும் ஒரு காரியம் செய்வதற்கு முன்போ கடவுளிடம் வேண்டிக் கொள்வோம்.

ஆனால் அதற்கான பதிலை கடவுள் எப்படி கொடுப்பார், நாம்

எடுக்கும் முடிவு சரியா, இல்லை தவறா என்று எப்படி தெரிந்து கொள்வது, நாமோ கடவுளிடம் கூறிவிட்டோம். ஆனால் அவரோ அதற்கான தீர்வினை எப்படி கொடுப்பார் என்று நமக்கு தெரியாது.

ஆனால் என்னுடைய விஷயத்தில் அவ்வாறு இல்லை, ஏனென்றால் சாய்பாபாவாகிய குரு அவர்களிடம் இருந்து நான் கேட்கும் கேள்விக்கு தீர்வு உடனடியாக கிடைத்துவிடும். கடவுளிடம் நேரடியாக நான் எதைப்பற்றி கேட்கின்றேனோ அதற்கான பதிலை கொடுத்துவிடுவது போல் தோன்றும்.

அவர் கூறும் அறிவுரையை பின்பற்றும் போது என்னுடைய அனைத்து காரியங்களும் மனநிம்மதியுடன் முடிகின்றன. நானும் என் குரு கூறுவதற்கு மாற்றாக ஒருபோதும் எதையுமே சிந்தித்ததில்லை. குரு கூறிய வாக்கை சந்தேகத்திற்கு இடமின்றி, அப்படியே கடைபிடிக்கின்றேன்.

சாய்பாபாவாகிய குரு அவர்கள் எனது வாழ்வில் வந்த பிறகு தான் தெளிவாக யோசிக்கும் திறனும், எப்படி சிந்தித்து செயல்படுவது என்றும் அறிந்து கொண்டேன். எனது இப்பிறவிக்கான அர்த்தமே சாய்பாபாவாகிய குரு ஸ்ரீராம் அவர்களை எனது வாழ்வில் நான் சந்தித்தது தான் என்பதை ஆனந்தத்துடன் கூறி நிறைவு செய்கின்றேன்.

– ஓம் சாய்ராம்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள்



வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம் - 7

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா

பாபா சாதாரண மனிதர் அல்ல, அவர் ஓர் மகா சக்தி படைத்த மாமனிதர் என்பதை உணர்ந்து கொண்ட தருணம் இவை என்று தனக்கு நேர்ந்த மூன்று சம்பவங்களை என்னிடம் கூறினார் மகல்சாபதி.

அதைக் கேட்டு முடித்ததும் எனக்குள்ளாக பாபாவின் மேல் உள்ள மதிப்பு பல மடங்காக உயர்ந்தது. அதே சமயம் அந்நிகழ்வுகள் சீரடியில் நடக்கும் போது நான் அருகில் தான் இருந்திருக்கின்றேன். ஆனால் எனக்கு அதை காணும் பாக்கியம் கிட்டவில்லையே என்ற ஏக்கம் உண்டாயிற்று.

இருப்பினும், எங்கே உண்மையான சத்குரு வழிகாட்டியாக இருக்கின்றாரோ, அவர் இவ்வுலகப் பெருங்கடலுக்கு அப்பால் நம்மை பத்திரமாகவும், எளிதாகவும் நிச்சயம் அழைத்துச்செல்வார் என்ற நம்பிக்கை என் மதில் ஆழமாக பதிந்தது.

பாபா சத்குரு என்று எனக்குள் தோன்றியதில் இருந்து, இப்போதெல்லாம் எனக்கு முன்னால் பாபா நின்று கொண்டிருப்பது போன்றும், கை நிறைய "உதி" யை எடுத்து என் நெற்றி நிறைய பூசி விடுவதுபோன்றும், அவரது ஆசி வழங்கும் திருக்கரத்தினை என் சிரசின் மீது வைத்து என்னை ஆசீர்வதிப்பதைப் போன்றும் தோன்றுகின்றது.

எனது இதயம் மகிழ்ச்சியால் நிரம்புகின்றது. அன்பு என் கண்களில் பொங்கி வழிகின்றது. குருவின் கரத்தின் தீண்டுதல் மூலம் சீடனில் உடலில் ஏற்படும் மாற்றம் வியக்கத்தக்கதாகும். முதலாவதாக நிலையற்ற உலகப் பொருட்களின் மீதுள்ள ஆசை கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்படுகின்றது.



முந்தைய பல பிறவிகளினால் ஏற்பட்ட பாவங்கள் முற்றிலுமாக அழிக்கப்படுகின்றன.

சாயிபாபாவின் சுந்தர ரூபத்தை பார்த்தாலே மகிழ்ச்சியால் நம் தொண்டை அடைத்துக்கொள்கின்றது. கண்ணீர் வெள்ளமென பெருக்கெடுக்கின்றது. உணர்ச்சிகள் உள்ளத்தை வெல்கின்றன. உடனடியாக "நான் யார்" என்னும் தேடுதலை தொடங்கி வைக்கின்றன.



தன்னையறிதலின் ஆனந்தத்தை உணரவைக்கின்றன. நான், நீ என்ற பேதத்தை கரைத்து அப்போதே நம்மை ஏகத்துவத்துடன் ஒன்ற வைக்கின்றன. புனித நூல்களை யாம் வாசிக்கத் துவங்கியதும் ஒவ்வோர் அடியிலும் எம் சத்குருவே ஞாபகத்திற்கு வருகின்றார்.

உதாரணமாக, சிவபுராணம் படித் தால், பாபாவே சிவனாகவும், இராமாயணம் படித்தால் இராமனாகவும், மகாபாரதம் படித்தால் கிருஷ்ணராகவும், பைபிள் படித்தால் கர்த்தராகவும், குரான் படித்தால் அல்லாவாகவும் தெரிகின்றார். அவரே அந்தந்த கதைகளை எனக்கு கூறுவதைப்போல் உள்ளது.

நான் யாரிடமாவது உரையாடத் தொடங்கினால், சாயிபாபாவின் கதைகள் உரிய விளக்கங்கள் தருவதற்கு ஏதுவாக என் நினைவிற்கு வருகின்றன. எதையாவது எழுதத் தொடங்கினால் சில வார்த்தைகளை


யோ, சில வாக்கியங்களையோ என்னால் தொடர்ச்சியாக எழுத முடியாது.

ஆனால் அவராகவே என்னை எழுதச் செய்யும் போது நான் எழுதுகிறேன், எழுதுகிறேன், எழுதிக்கொண்டே இருக்கின்றேன். அதற்கோர் முடிவில்லை. சீடனின் அகங்காரம் தலை எடுக்கும் போதெல்லாம் தன் கரங்களால் அதை கீழே அழுத்தி தமது சக்தியைக் கொடுத்து அவனது குறிக்கோளை அடையும் படி செய்து ஆசீர்வதிக்கின்றார்.

சாயியின் முன்னால் எவன் ஒருவன் சாஷ்டாங்கமாக சரண டைந்து தனது இதயத்தையும், உயிரையும் அவரிடம் ஒப்புவிக் கின்றானோ, அவன் வாழ்க்கையில் நான்கு முக்கிய குறிக்கோளாகிய அறம்(தர்மம்), பொருள்(செல்வம்), இன்பம்(ஆசை), வீடு (முக்தி), இவைகளை எளிதில் அடைவான் என்பது மறுக்கமுடியாத உண்மை என்றவாறே சிந்தித்துக் கொண்டே நானும், மகல்சாபதியும் மசூதிக்கு வந்துவிட்டோம்.

அங்கே பாபாவைச்சுற்றி பெருங் கூட்டம் கூடியிருக்க, பாபா அவர் களிடையே தனது சாஸனாம்ருத திருமொழிகளை உதிர்த்துக் கொண் டிருந்தார். "எனது அடியவர்களாகிய உங்களது வீட்டில் உணவுக்கோ, உடைக்கோ ஒருபோதும் பஞ்ச மேற்படாது.

உங்களது மனதை மட்டும் எப்போதும் என் மீதே அழுத்தமாக



வைத்திருங்கள். என்னையே முழு மனதுடன் வழிபாடு செய்யும் அடிய வர்களின் நலன்களை கவனிப்பதே எனது தலையாய கடமை. எனவே எனது அடியவர்கள் உணவுக் காகவும், உடைக்காகவும் கடின முயற்சி எடுக்காதீர்கள்.

உங்களுக்கு நியாயமாக ஏதாவது தேவைப்பட்டால் கடவுளிடம் இரந்து கேளுங்கள். இவ்வுலக கவுரவத்தை விட்டுவிடுங்கள். கடவுளின் அருளையும், ஆசியையும் பெற முயலுங்கள். அவரின் சன்னி தானத்தை அடைவதே கவுரவம் என்று நினையுங்கள். உலக கவுரவங்களால் வழிதவறி சென்று விடாதீர்கள்.

இறைவனின் ரூபம் மனதில் அழுத்தமாக பதியட்டும். புலன் களும், மனமும் எப்போதும் இறைவழி பாட்டிற்கு உரியதாக இருக்கட்டும். உடல், செல்வம், வீடு,

முதலிய அழியும் பொருட்களின் மீது மனது அலைபாயாமல் என்னையே நினைக்கட்டும். அப்போது அது அமைதியாகவும், அடக்கமாகவும், கவலையற்றும் இருக்கும். என்ற வாறே அனைவருக்கும் "உதி" கொடுத்து அனுப்பினார்.

நானும் பாபாவை வணங்கி உதி வாங்கிக்கொண்டு தீட்சித் வாடாவிற்குச் சென்றேன். அங்கு பீஷ்மா, கபர்டே போன்றோர் தங்கியிருந்தனர். முக்கியஸ்தர்கள் அனைவரும் இராமநவமியை முன்னிட்டு சீரடியில் நடக்கும் உருஸ் என்ற சந்தனக்கூடு ஊர்வலத் தில் கலந்துகொள்ள வந்திருந்தனர்.

அப்போது லட்சமண்ராவ் என்ற காகா மஹாஜனி மசூதிக்கு பூஜை சாமான்களோடு போய்க் கொண்டிருந்தார். உடனே பீஷ்மா காகா மஹாஜனியிடம் எங்கே பூஜை பொருட்களோடு புறப்பட்டு விட்டாய் என்று கேட்டார். அதற்கு அவர் நாளை இராம நவமி இல்லையா உருஸ் கொண் டாடவேண்டாமா அதற்குத்தான் என்று பதிலளித்தார்.

உடனே பீஷ்மா, மஹாஜனி யிடம் இராமநவமி அன்று எப்படி உருஸ் கொண்டாடும் பழக்கம் தோன்றியது இதில் ஏதோ உள் அர்த்தம் இருப்பதைப் போன்று தோன்று கின்றதே! எப்போது சீரடியில் இராமநவமி அன்று உருஸ் கொண்டாடும் வழக்கம் ஆரம்பம் ஆனது என்று கேட்டார்.

அதற்கு கபர்டே, நான் கேள்விப்பட்டதை கூறுகின்றேன் என்றவாறு உருஸ் ஆரம்பமான கதையைக்கூறினார். கோபர்கான் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருந்த திரு. கோபால்ராவ் குண்ட் என்ப வர் பாபாவின் தீவிர அடியவர் அவருக்கு மூன்று மனைவிகள் இருந்தும் வெகுநாட்களாக குழந்தைகள் இல்லை.

ஏதேதோ வைத்தியம் பார்த்தும், கோவில் குளம் சுற்றியும் ஒரு பலனும் இல்லை. இறுதியாக பாபாவிடம் அடைக்கலம் புகுந்தவருக்கு பாபா, "அல்லா உனக்கு ஒரு சத் புத்திரனை வழங்குவார்" என்று ஆசி வழங்கினார். விரைவிலேயே பாபாவின் வாக்குப்படி அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது.

அந்த மகிழ்ச்சியை கொண்டாட திரு. குண்ட் அவர்கள், சீரடியில் ஒரு திருவிழா கொண்டாடவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதை முழுக்க முழுக்க பாபாவிற்கு அர்ப் பணிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தால் இஸ்லாமியர்களின் பண்டிகையான "உருஸ்" என்ற சந்தனக்கூடு ஊர்வலமாக நடத்தி கொண்டாடுவது என்று தீர்மானிக் கப்பட்டது.

தனது எண்ணத்தை தாத்யா பாட்டீல், தாதா கோதே பாட்டீல், மாதவ்ராவ் தேஷ்பாண்டே போன்ற மற்ற அடியார்களிடம் கூறினார். அவர்கள் அனைவரும் இந்த யோசனைக்கு உடன்பட்டு பாபாவிடம் சென்று அனும தியையும், ஆசியையும் பெற்றனர்.

உருஸ் விழாவினை என்று நடத்துவது என்று ஆலோசித்து இறுதியில் பாபாவின் ஆலோசனை யின்படி இராமநவமி அன்று உருஸ் நடத்துவது என்ற முடிவு செய் யப்பட்டு, விழாவை கொண்டாடு வதற்கு கலெக்டரிடம் அனுமதி பெறுவதற்கு விண்ணப்பம் செய்யப் பட்டது.

ஆனால் கிராம அதிகாரி இஸ்லாமிய திருவிழாவான உருஸ்சை இராமநவமி அன்று கொண்டாடுவதில் ஏதோ உள் நோக்கம் இருக்க வேண்டும் என்று கலெக்டரிடம் விழா குழுவினருக்கு எதிராக தகவல் கொடுத்ததால் விழாவிற்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார் கலெக்டர்.

ஆனாலும் சாயி பாபா ஆசீர் வதித்திருப்பதால் மீண்டும் மீண்டும் முயற்சித்து சரியான விபரங் களைக்கொடுத்து அனுமதி வாங்கி விட்டனர் விழா குழுவினர். சா யிபாபா இவ்விசயத்தில் ஏதோ ஒரு பெரிய முடிவு வைத்திருந்த தாகத்தான் தோன்றுகின்றது. அதாவது ஸ்ரீஇராமநவமி அன்று உருஸ் நடத்த அனுமதித்து இந்து முஸ்லீம் மக்களை ஒற்றுமைப் படுத்துவதற்காக இன்றி வேறு என்னவாக இருக்க முடியும்.

இன்றுவரை இருவிழாக்களும், இரு இன மக்களால் ஒற்றுமை யாக கொண்டாடப்பட்டு வருவதைக் கண்டால் சாயி பாபாவின் குறிக்கோள் நிறை வேறி விட்ட தாகத்தானே தோன்றுகின்றது.

ஒரு வழியாக திருவிழாவிற்கு



அனுமதி கிடைத்துவிட்டது. ஆனால் திருவிழாவை நடத்துவதற் குண்டான தடைகள் தோன்றியது. 1897 ல் சீரடி ஓர் குக்கிராமம். அங்கு தண்ணீர் பஞ்சம் அதிகமாக இருந்தது. சீரடியில் இரண்டு கிணறுகள் இருந்தது. ஒரு கிணறு சுத்தமாக வற்றிவிட்டது. மற்றொரு கிணறு முழுக்க உப்பு தண்ணீராக இருந்தது.

அக்கிணற்றில் மலர்களைத்தூவி உப்புத்தண்ணீரை நல்ல தண்ணீ ராக மாற்றினார் சாயிபாபா. அக்கிணற்றுத் தண்ணீரும் சீரடி



மக்களுக்கு போதவில்லை. ஆகையால் மக்கள் வெகுதூரத்தில் இருந்து தோல் பைகளில் தண்ணீர் சேகரித்து எடுத்து வந்தனர். எனவே உருஸ் விழாவிற்கு அதிக அளவில் தண்ணீர் தேவைப்பட்டது.

அப்பொருப்பை தாத்யா பாடீல் ஏற்றுக்கொண்டு அருகில் உள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான தோல்பைகளில் தண்ணீர் கொண்டுவந்தார். தற்காலிக கடைகள் கட்டப்பட்டு மல்யுத்த போட்டிகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டது.

ஊர்வலத்தில் கொண்டு செல்ல இரண்டு கொடிகள் தயார் செய்தால் சிறப்பாக இருக்கும் என்று கோபால்ராவ் குண்ட் நினைத் தார். உடனே அவருக்கு பாபாவால் நன்மைகளை அடைந்த அஹமத் நகர் தாமு அண்ணா ஞாபகத்திற்கு வந்தார்.

தாமு அண்ணாவும் இரண்டு மனைவிகளைத் திருமணம் செய்தும் குழந்தைகள் இல்லாத ஏக்கத்தில் இருந்தபோது சாயிபாபாவின் அனுகிரகத்தால் குழந்தைச் செல்வங்களை அடைந்தார். உருஸ் திருவிழா ஊர்வலத்திற்காக அவரை ஒரு கொடி ஒன்றை தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

மற்றொரு கொடியை தயாரித்துக் கொடுக்குமாறு திரு. நானாஸாஹேப் நிமோண்கரிடம் கேட்டுக்கொண்டார்.

இருவரும் தங்களுக்கு இடப்பட்ட வேலையை ஏனோ தனோ என்று செய்யாமல், இரண்டு கொடிகளையும் எம்ப்ராய்டரி வேலைகளுடன் மிகப்பிரமாண்டமாக தயாரித்துக் கொண்டு வந்தார்கள்.

திருவிழாவில் இரண்டு கொடிகளும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, துவாரகாமாயி என்று சாயிபாபாவால் அழைக்கப் பட்ட மசூதியின் இரண்டு மூலைகளிலும் ஊன்றப்பட்டன. இந்திகழ்வு இன்றுவரை நடைபெற்று வருகின்றது.


அடுத்தடுத்த ஆண்டுகளில், இத்திரு விழாவுடன் சேர்த்து இன்னுமொரு ஊர்வலமும் நடத்தப்பட்டது. முகம்மதிய பக்தரான திரு.அமீர்சக்கர் தலால் அவர்களால் இச்சந்தன ஊர்வலத்தின் எண்ணம் உருவானது. பெரும் முகம்மதிய ஞானிகளை கவுரவிக்கும் பொருட்டு, இவ்வூர்வலம் நடத்தப் பட்டது

இந்த ஊர்வலத்தில் சந்தனக் குழம்பும், சந்தனப்பொடியும், தட்டுகளில் இடப்பட்டு பேண்டு வாத்தியம் முழங்க, நறுமணப் பொருட்கள் முன்னால் புகைந்து கொண்டு செல்ல கிராமத்தின் வழியாக மசூதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பின்பு தட்டுகளில் எடுத்து வந்தவைகள் “நிம்பா” என்ற குழிகளில் கொட்டப்பட்டன. சந்தனக்குழம்பு மசூதியின் சுவர்களில் பூசப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகள் திரு. அமீர் சக்கர் அவர்களால் இவ்வேலை மேற்பார்வை இடப்பட்டது. அவ

ருக்குப் பின் அவரது மனைவியால் பார்க்கப்பட்டது.

எனவே ஒரே நாளில் முகம்மதி யரால் சந்தனக்கூடும், இந்துக்களால் கொடிகளும் அருகருகே சென்றது. இப்போதும் அப்படியே எந்தவித இ டை யூ று மி ன் றி ந ட ந் து கொண்டிருக்கின்றது. இதுதான் 1897 ஆம் ஆண்டில் இருந்து



1912 ஆம் வருடம் இன்றையநாள் வரை சீரடியில் இராமநவமி அன்று உருஸ் கொண்டாடப்பட்ட கதை என்று கூறினார் கபர்டே.

அ ப் ப டி யா ன ா ல், உ ரு ஸ் கொண்டாடப்படும் நாள் இராம நவமியாக இருப்பதால் இதில் ஏதோ ஒரு தெய்வ ஏற்பாடு இருப்பது உ ண் மை தா ன். பா பா வே று ஆசீர்வதித்திருக்கின்றார் அல்லவா? இந்துக்களுக்கு இராம நவமி தினம் வேறு மிகவும் பிரியமானது. நாம் ஏன் இந்த நாளில் உருஸ் விழாவுடன் இராம நவமி விழாவையும் சேர்த்து கொண்டாடக்கூடாது என்றார் பீஷ்மா,

மிகவும் நல்ல யோசனை, அனால் அதற்கு பாபா வின் அ னு ம தி வ ா ங் க வேண்டுமே! என்றார் காகா மஹாஜனி.

ஆமாம் கண்டிப்பாக வாங்க வேண்டும்.

முதலில் பாபாவிடம் விசயத் தைக்கூறி அனுமதி வாங்கிய பின்பு மற்ற ஏற்பாடுகளைப்பற்றி பேசுவோம் என்றவாறே உடனடி யாக இருவரும் புறப்பட்டு பாபா வைக் காணச் சென்றனர். நானும் உடன் சென்றேன்.

எங்களைக் கண்ட தும் பாபா சற்றும் தாமதிக் காமல் “தீட்சித் வாதாவில் என்ன நடந்து கொண்டி ருக்கின்றது எதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தீர்கள்” என்று கேட்டார். வாதாவில் நாங்கள் பேசிக் கொண்டிருந்த அனைத்தையும் பாபா அறிந்திருக்கின்றார் என்று நினைத்த காகா மஹாஜனி பாபா என்ன சொல்லப் போகின்றாரோ என்ற பயத்தில் ஏதும் பேசாமல் அமைதியாக இருந்தார்.

தொடரும்.

ஓம் சாய்ராம்.

நலமுடன் வாழ்வோம்

வாழ்வில் தோன்றும் பலவிதமான சவால்களுக்கும் தீர்வு ஒன்றே!



நம் அனைவர் மீதும் அளவில்லா அன்பு கொண்டு நம்மைப் படைத்த இறைவனே நமக்கு குருவாக உருவெடுத்து ஆயிரம் வருடங்களுக்கு முன்பே உபதேசித்த சக்தி வாய்ந்த எளிய மந்திரம். இம் மந்திரம் கொடுப்பினை உள்ளவர்களை மட்டுமே சென்றடைந்து ஜபிக்கத் தூண்டும்.

வாயு மண்டலத்திலும், நம்மையும் சூழ்ந்திருக்கும் எதிர்மறை சக்திகள், தீய எண்ணங்களை நீக்கி, நம் வாழ்வில் நேர்மறை சக்தியை ஒளிரச் செய்யும் ஸ்ரீ குரு தத்தாத்ரேயர் அளித்த மஹா மந்திரம்,


"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"
திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"

இந்த மந்திரத்தை தினமும் 108 முறை எவ்விதமான கட்டுப்படும் இல்லாமல் ஆத்மார்த்தமாக, ஜபம் செய்ய நம் இல்லத்திலும், உள்ளத்திலும் நேர்மறை சக்தியின் பாதுகாப்பு வளையம் நம்மை காத்து நிற்கும்.

சமர்த்த சத்குரு ஸ்ரீ சாய்மகராஜ் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருட்பார்வை நம் அனைவரையும் ஆசீர்வதிக்கட்டும். வாழ்க! வளர்க! குருவே துணை!

விபரங்களுக்கு:

"பாராயணப் பகலவன்"
திரு. சுந்தர்சாய், 9789404451



பகவான் ஸ்ரீ ரமணரின்
ராஜ மார்க்கம்

பகவான் இரமணர் யாரிட மும், கடவுள் எங்கேயோ இருக் கிறார். அவரை காண்பது மிகவும் கடினம். அது யாருக்கோ சிலருக்குத் தான் முடியும். வீட்டைத் துறக்க வேண்டும். குடும்பத்தை விட்டு ஓடிவிட வேண்டும் என்றெல்லாம் வற்புறுத்தவே இல்லை.

இரமணரிடம் பகவானே, கடவுளை அறிவது எப்படி? என்ற கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு பகவான், கடவுளை அறிவது இருக்கட்டும். முதலில் உன்னை நீ யார் என்று தெரிந்து கொண்டு விட்டு அதற்கு அன்னிய மாக, அதற்கு அப்பால் கடவுள் என்கிற விஷயம் தனியே இருக் கிறதா என்று பார் என்றார். அதா வது, "இந்த கேள்வியை கேட்பவன் யார்" என்று தன்னையே ஏன் கேட் டுக் கொள்ளக் கூடாது என்று ஞான மார்க்கத்தை போதித்தார்.

மீண்டும், மீண்டும் பகவா னிடம் "நான் யார்" என்கிற ஆத்ம விசாரத்தை எப்படி செய்வது என்று கேட்கப்பட்டது.

அதற்கு மகரிஷிகளும், "அப்பா! ஓர் இருட்டு அறையில் இருக்கிறாய். இருட்டில் எதுவும் தெரியவில்லை. ஆனால், நான் இருக்கிறேனா என்று யாரிடமாவது கேட்பாயா. நான் எங்கே என்று இருட்டில் தேடுவாயா. கண்கள் இருட்டில் தவித்தாலும் நான் இருக்கிறேன் என்கிற உணர்வு அதாவது உனக்குத் தெள்ளத் தெளிவாக தெரிகிறதல்லவா?

நீ இருக்கிறாய் என்பதை யாரேனும் சொல்ல வேண்டுமா என்ன? அந்த "நான் இருக்கிறேன்" என்கிற உணர்வின் மீது உன் கவனத்தை செலுத்து. அதனை வைத்துத்தான் மற்ற எண்ணங்கள் கூட்டமாக அமர்ந்துள்ளன. எனவே, நான் இருக்கிறேன் எனும் உணர்வின் மீது கவனத்தை திருப்புங்கள்.

சிரத்தையோடு மனதை உள்முகமாக திருப்ப வேண்டும். விழித்திருக்கும் எல்லா நேரங்களிலும், எல்லா செயல்களிலும் ஏற்படும் "நான்" செய்கிறேன், நான் விழிப்போடு இருக்கின்றேன், நான் சாப்பிடுகின்றேன், நான் பேசுகின்றேன், என்றபடி அனைத்தையும் கவனித்துக் கொண்டிருங்கள். மனம் தன்னால் அந்த "நான்" என்கிற உணர்வு எங்கு உற்பத்தியாகிறதோ அங்கு சென்று ஒடுங்கும்.

அந்த நான் எனும் எண்ண விருத்தி எப்படி உடல் முழுவதும் பரவியிருக்கிறதோ, தன்னையே உடலாக நினைத்திருக்கிறதோ அப்படியே மெல்ல கும்பி குறுகும்.

அப்படி அது சென்று ஒடுங்கும் இடம்தான் அருணாசலம். அதுவே ஆத்ம ஸ்தானம். நான் எனும் எண்ணம் தோன்றிய பிறகுதான் மற்ற எல்லா எண்ணங்களும் தோன்றுகின்றன.

எனவே, இந்த மனதின் உற்பத்தி ஸ்தானத்திற்கு செல்லுங்கள்.

அப்போதுதான் நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்பதை பார்ப்பீர்கள்.

பகவானே, "மூர்த்தி வழிபாடு, பூஜை, புனஸ்காரங்கள்,மந்திரங்கள், பாராயணம், பிரார்த்தனை என்று எத்தனையோ இருக்கிறதே" இவை எல்லாம் நான் யார் என்பதை காட்டிக்கொடுக்காதா?

'இவையெல்லாமும் சித்த சுத்தி தரும். மனதில் ஏகாக்கிரகம் என்கிற மன ஒருமையை உண்டாக்கும். மனம் ஏகாக்கிரகமானால் ஆத்ம வித்தை எளிதாக சித்திக்கும். அவ்வளவே! எனவே காதை சுற்றி மூக்கை தொட்டாலும் மீண்டும் மனதிடம் தான் வரவேண்டும்" என்று பதில் பகன்றார்.

எந்த சாதனையும் செய்ய முடியவில்லையே, நீங்கள் சொல்வதும் புரியவில்லையே என்று கூறிய அன்பர்களுக்கு, அது புரியும் வரை "இதோ இந்த அருணாசலத்தை வலம் வாருங்கள். போதும். இதுவே சிவம்" என்று கூறினார்.

குவலயம் போற்றும் "குதம்பைசித்தர்"

மாங்காய்ப்பால் உண்டு மலை மீதிருப்போர்க்கு, தேங்காய்ப்பால் ஏதுக்கடி குதம்பாய் தேங்காய் பால் ஏதுக்கடி என்பது குதம்பைச் சித்தரின் பாடல். மாங்காய்ப்பால் என்றால் ஆன்மாவிலிருந்து சுரக்கும் அமுதம். இது பஞ்ச வகை அமுதங்களில் ஒன்றாகும்.

மலை மீதிருப்போர்க்கு என்றால் நமது உச்சந்தலையின் மேல் உள்ள துரிய நிலையைக் குறிக்கின்றது. அதாவது ஆன்ம நிலையைக் குறிக்கின்றது

ஆன்ம நிலையிலிருந்து அசாதாரணமான அமுதத்தை ருசிப்போர்க்கு உலகத்தவர் உண்டு மகிழும் சாதாரண தேங்காய்ப்பால் எதற்கு என்று வினவுகின்றார் குதம்பைச் சித்தர்.

குதம்பை என்றால் பெண்கள் காதிலே அணியும் ஒரு வகை தொங்கட்டான் போன்ற அணிகலன். இவரின் பிறந்த ஊர் சரியாகத் தெரியவில்லை. இவர் யாதவர் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், பசுக்களை மேய்க்கும் தொழில் செய்து வந்த தம்பதியருக்கு பிறந்தவர் என்பதும் சில நூல்கள் மூலம் தெரிய வருகிறது.

இவரது அன்னைக்கு தன் குழந்தை மீது மிகுந்த பாசம். ஆண்குழந்தையாக இருந்தாலும்,



குழந்தையின் காதிலே ஒரு தொங்கட்டான் அணிவித்தாள் அந்த புண்ணியவதி. அது ஆடும் அழகைப் பார்த்து குழந்தையிடம் மனதைப் பறி கொடுப்பாள். அந்த அணிகலனின் பெயரால் குதம்பை என்றே மகனை அழைக்க ஆரம்பித்து விட்டாள். அதுவே அவருக்கு நிலைத்து விட்டது.

16 வயதான குதம்பையார், ஒரு சித்தரை சந்தித்தார். சித்தர் அவரிடம், குதம்பை! நீ சாதிக்கப்

பிறந்தவன். உனக்கு உன் தாய் திருமணம் முடிக்க இருக்கிறாள். ஆனால், அது நடக்காது. காரணம், நீ கடந்த பிறவியில் ஒரு காட்டில் இறை தரிசனம் வேண்டி தவமிருந்து வந்தாய். ஆனால், இறைவனைக் காணமுடியாத படி விதி தடுத்து விட்டது.

நீ தவம் இருந்த காட்டில் ஒருநாள் பெரும் புயலடித்தது. வேறுடன் சாய்ந்த ஒரு மரத்தின் அடியில் தவநிலையில் இருந்த படியே நீ உயிர் விட்டாய். விட்ட தவத்தை தொடரவே, நீ பிறந்திருக்கிறாய். தவம் என்றால் என்ன தெரியுமா? என்றவர், தவத்தின் மேன்மை, யோக சாதனைகள் பற்றி குதம்பையாருக்கு விளக்கிக் கூறினார்.

குதம்பையார் மிகுந்த பணிவுடன் அவற் றையெல்லாம் கேட்டு, தன்னை ஆசிர்வதித்து, இப்பிறவியிலும் தவம் தொடர ஆசி வேண்டினார். அந்த சித்தர் அவருக்கு ஆசியளித்து மறைந்தார். அவரையே தன் குருவாக ஏற்ற குதம்பையார், அவர் சென்ற திசையை நோக்கி வணங்கினார்.



அதன் பிறகு தன் தாயிடம் சென்று, சித்தர் கூறியதைக்கூறி தான் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. துறவியாகப் போகிறேன் என்றார். தாய்க்கோ அதிர்ச்சி. என்னடா! சித்தன் போல் பேசுகிறாயே! இல்லறமே துறவறத்தை விட மேலானது. மகனே! உன்னைப் பெற்றதால் நான் மகிழ்ந்தேன். நீ பெறும் குழந்தைகளாலும் நான் மேலும் மகிழ வேண்டும். ஒரு தாயின் நியாயமான ஆசை இது. அதை நிறைவேற்றி வை என்றாள்.

அம்மாவின் கண்ணீர் குதம்பையாரை வருந்தச் செய்யவில்லை. அவரது எண்ணமெல்லாம், முந்தைய பிறவியின் தொடர்ச்சியாக தவம் செய்வதிலேயே இருந்தது.

அன்றிரவு தாயும் தந்தை யும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். குதம்பையார் கதவைத் திறந்து வெளியே வந்தார். சந்திர ஒளியில் மிக வேகமாக நடந்தார். மனதின் வேகத்தை விட அதிக வேகம் அது! அந்த வேகத்துடன் சென்றவர் காட்டில் போய் தான் நின்றார்.

பூர்வஜென்மத்தில் அவர் மீது சாய்ந்த மரம் இருந்த பகுதி அது. ஆனால், குதம்பையாருக்கு அது தெரியவில்லை. அங்கு நின்ற அத்தி மரத்தில் ஒரு பெரிய பொந்து இருந்தது. அதற்குள் சென்று குதம்பையார் அமர்ந்தார்.

ஒருவேளை, தாய் தந்தை காட்டுக்குள் தேடி வந்து நம் தவத்தைக் கலைத்து அழைத்துச் சென்று விட்டால் என்ன செய்வது என்ற முன் எச்சரிக்கையால் இப்படி செய்தார். தவம்... தவம்... தவம்... எத்தனையோ ஆண்டுகள் உணவில்லை, கண்கள் மூடவில்லை.

இறைவனின் சிந்தனையுடன் கடுமையான தவத்தில் இருந்தார்.


மயூரநாதர் திருக்கோவில்
மாயவரம்

இறைவா! உன்னை நேரில் காண வேண்டும், நீ என்னைக் காண வா! அல்லது உன் இருப்பிடத்திற்கு என்னைக் கூட்டிச் செல். ஏ பரந்தாமா! எங்கிருக்கிறாய்! என்று குதம்பையாரின் மனக்கூட்டுக்குள் ஒலித்துக் கொண்டிருந்தது.

அப்போது இறைவன் அசரீரியாக குதம்பை! நீ இப்போது வைகுண்டம் வர வேண்டாம். உன்னால் இந்த உலகத்துக்கு இன்னும் நன்மைகள் நடக்க வேண்டியிருக்கிறது. நீ இப்போது இருப்பது விந்திய மலைப்பகுதியில்.

இங்கே பல யானைகள் இருக்கின்றன. இந்த யானைகளுக்கு மந்திரங்களை ஈர்க்கும் சக்தியுண்டு. உனக்கு மழை பெய்வதற்குரிய வருண மந்திரத்தை உபதேசிக்கிறேன். இந்த மந்திரத்தை இங்குள்ள யானைகளின் காதில் விழும்படியாக நீ உச்சாடனம் செய். அவை பிளிறும்போது அந்த ஓசை மந்திரமாக வெளிப்படும்.

அப்போது பூமியில் அமுதம் போல் மழை கொட்டும். அந்த மழையால் உலகம் செழிப்படையும். என்றான். குதம்பையாருக்கு வருணமந்திரமும் உபதேசிக்கப் பட்டது. குதம்பையாரும் காட்டில் இருந்தபடியே அதை உச்சாடனம் செய்தார். மழை பொழிந்து காடு செழித்தது.

யார் வாசியோகம் பயின்று, ஆழ்ந்த இறைவனை வணங்குகிறாரோ, அவர்களெல்லாம் குதம்பைச் சித்தரை மானசீக குருவாக ஏற்று மழை வேண்டி வணங்கினால், இன்றும் மழை பெய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இந்த அரிய வரத்தை நமக் கருளும் குதம்பைச் சித்தர் மயிலாடுதுறையில் சித்தியடைந்தார். மயிலாடுதுறை மாயூரநாதர்கோயிலில் சிவன் சன்னதி சுற்றுப்பிரகாரத்தில் தட்சிணாமூர்த்தி அருகில் குதம்பை சித்தர் ஜீவ சமாதி உள்ளது.

இங்கு இவருக்கு தனி சன்னதியும் உள்ளது. குதம்பை முனிவர் ஆடி மாதம் விசாகம் நட்சத்திரத்தில் அவதரித்தார்.

மழைவேண்டி இவருக்கு விசேஷ பூஜை செய்தால், பெய்யெனப் பெய்யும் மழை! என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.

குதம்பையாரின் தியானச் செய்யுள்:

சூலம் ஏந்திய சுந்தர மூர்த்தியே!
அத்திமரம் அமர்ந்து, ஆயசித்தி
அனைத்தும் பெற்ற சத்திய சித்தரே!
கும்பிட்ட எமக்கு நம்பிக்கையுடன்
நல்லாசி தருவாய் குதம்பை பெருமானே!

திருச்சிற்றம்பலம்.

SOUNDS GOOD

LIGHT MUSIC ORCHESTRA

BOOK FOR EVENTS



Wedding | Birthday | Corporate Get together Events



- Light Music
- Karaoke
- Instrumental Music
- DJ Music




www.soundzgood.in

95 66 16 76 80

saai_archana_vr

SOUNDSGOOD Musically the best

SoundsGood Music Group



யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதிய அற்புதமான ஆன்மீகத் அனுபவத் தேடல்கள் நிறைந்த

"குருவைத்தேடி"

நூல் விற்பனையில் உள்ளது. தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.

விலை 400/-
(தபால் செலவு உட்பட)

G- PAY NO: 9941816692

SAI DHYANALAYA

பழைய சீவரம்
ஸ்ரீ சாய்நாத் மகராஜ் ஆலயம்









“பிரார்த்தனை செம்மல்”

திரு.கலியன்சாய்

தம்பதியினருக்கு

43வது திருமணநிறைவு நாள் வாழ்த்துக்கள்!



2.09.24 அன்று திருமண நிறைவு நாள் கொண்டாடிய எங்களது அன்பிற்குறிய தம்பதியினர் இருவரும் பகவான் சாயிநாதரின் ஆசியுடன் நீள் ஆயுள், நிறை செல்வம், வான் புகழ், மெய்ஞானம் பெற்று சகல செல்வங்களோடு வாழ்க வளமுடன் என்று மனதார வாழ்த்தி வணங்குகிறோம்.

அன்புடன்,

சாய் மகராஜ் குருவைத் தேடி ஆன்மீக மாத இதழ்,

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்,

சென்னை

மற்றும் சாய் குடும்பத்தினர்.



மணமகள் தேவை!



பெயர்	: S. சீனிவாசன் B BA, LLB(CS)
தந்தை	: V. சண்முகம் (பைனான்ஸ்)
தாய்	: S. சந்திரிகா
தொழில்	: Advocate & Auditing, off salam
சகோதரி	: S.யுவராணி Auditing
பிறந்த ஊர்	: சேலம்
குலதெய்வம்	: ஐயனாரப்பன்
சாதி	: அரசு வன்னியர்
மாத வருமானம்	: 70000/
வீடு வாடகை வருமானம்	: 40000/
தோட்டம்	: 2 ஏக்கர்
மாடி வீடு	: 3
வீட்டு மனை	: 3
தொடர்புக்கு	: 9842173837, 9566943502



சாய் தியானாலயா
ஆத்ம ஞான பீடத்தின்
13வது சீரடி
புனித யாத்திரை

யோகி ஸ்ரீராம் பாபாவுடன்
ஆறு நாட்கள் ஓர் ஆனந்தப்
பயணம். வழிநெடுக சத்சங்கம்,
யோகா, தியானத்துடன்
மெய் ஞானப் பாதையில்
ஸ்ரீ சாயி தரிசனம்.

ஆறு நாட்கள். கட்டணம்: 6500/–
நாள்: 15.1.2025
(இரயிலில் உணவு தவிர்த்து
அனைத்து செலவுகளும் உட்பட)

விபரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும் **99418 16692, 88258 31068**

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்

சித்தர்களின் சீவசமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் திருவேற்காடு கருமாரியம்மன் ஆலயம் உலகப் புகழ் பெறக் காரணமாக இருந்த, ஸ்ரீலஸ்ரீ திருவேற்காடு சுவாமி இராமதாஸ் அவர்களின் சீவபீடத்தை தரிசனம் செய்து அவரின் வரலாற்றுக் குறிப்புகளை அறிந்து கொள்வோம்!



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

ஸ்ரீலஸ்ரீ திருவேற்காடு சுவாமி இராமதாஸ்



சுவாமிகளின் சீவ பீடமும், சுவாமிகளின் குருநாதர் ஸ்ரீ மத் நடேசனார் சீவபீடமும், ஒரே இடத்தில் அமைந்துள்ளது. குரு, சீஷ்யர் இருவருடைய சீவபீடமும் ஒரே இடத்தில் அமைந்திருப்பது சிறப்பு.

உத்திரமேரூர் அடுத்த கீழாமூரில் சுவாமி இராமதாசர் 1916 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8 ஆம் தேதி சதய நட்சத்திரத்தில் அவதரித்தார். "தோன்றின் புகழோடு தோன்றுக" என்ற வள்ளுவரின் வாக்கினுக்கேற்ப சுவாமிகள் இளமையிலேயே ஒழுக்கம் மிக்கவராக விளங்கியவர் ஆன்மீகத்திலும் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

திருக்கழுக்குன்றத்திலும், சென்னை முத்தியால் பேட்டையிலும் படிப்பை முடித்து பொதுப் பணித்துறையில் பணியாற்றினார். 1936 ல் இருந்து திருவேற்காடு ஆலயம் வந்து அன்னை கருமாரியம்மனை வழிபடத் தொடங்கினார்.

குடிசையில் இருந்து மக்களுக்கு அருள்பாலித்த அன்னைக்கு இன்றுள்ள ஆலயத்தை பக்தர்களின் நன்கொடையைக் கொண்டும், அருள்வாக்கு கூறியும் அதில் வரும் காணிக்கையைக் கொண்டும் கட்டி முடித்தார்.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் அன்னை கருமாரியின் உலகளாவிய புகழுக்கு சுவாமி





இராமதாசரின் பணி ஒரு பெரும் முயற்சியாகும். கால ஓட்டத்தில் சுவாமிகள், சுவாமி நடேசனார் அவர்களின் சீடரானார்.

அதன்பிறகு ஆன்மீகப்பணியில் தீவிரமாக ஈடுபடலானார். தான் செய்துவந்த பொதுப்பணித்துறை பணியை துறந்துவிட்டு நிரந்தரமாக அன்னை கருமாரிக்கு தொண்டு செய்து வரலானார்.

கருமாரியம்மன் ஆலயத்தில் சுவாமி நடேசனாருக்குப்பின் 1961ல் சுவாமிகள் தேவி உபாசகரானார். அவரது அருள் பணியினை காஞ் சிப்பெரியவர்கள் பாராட்டி ஆசி வழங்கியுள்ளனர்.

1957 ல் அன்னை கருமாரியம்மன் திருக்கோவிலின் கோபுரம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. 1964 ல் சுவாமிகளின் பெருமுயற்சியால் கருமாரியம்மன் திருக்கோவில் கட்டுமானப்பணிகள் நிறை வடைந்து குடமுழுக்கு செய்விக்கப் பட்டது.

உலகநலன் கருதி சுவாமிகள் 1982 ஆம் ஆண்டு மகா சண்டி ஹோமம் நடத்தி வைத்தார். ஆனந்த ஞானரதம், தங்கத்தேர், வெள்ளித்தேர், ஆகியவற்றை உருவாக்கி அதில் அன்னையை பவனிவரச்செய்தார்.

சுவாமிநடேசனார்,சுவாமிஇராம தாசர் ஆகியோரின் குருபூஜை அன்று அன்னை கருமாரி அம்மன் குரு மற்றும் சீடர் ஆகியோருக்கு காட்சி தந்து திருவீதி உலா வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆண்டுதோறும் பிரம்மோற்சவ விழாவும், அன்னை கருமாரிக்கு தினமும் ஆறுகால பூஜைகளும்

தொடர்ந்து நடைபெற சுவாமிகள் நிரந்தர ஏற்பாடுகளை செய்துள்ளார்கள்.

சுவாமிகள் கோவில் பணிமட்டுமின்றி, கல்விப்பணியிலும் ஈடுபட்டார்கள். அன்னை கருமாரியம்மனின் ஆலயத்திற்கு அரும்பணிகள் ஆற்றிய சுவாமிகள், 22.8.2000 அன்று செவ்வாய்க்கிழமை அன்னையின் திருவடிகளில் சரணடைந்தார்.

குரு நடேசனாருக்கு, மாசி மாதம் திருவாதிரை நட்சத் திரத்திலும், சிஷ்யர் சுவாமி இராம தாசருக்கு ஆவணி மாதம் பரணி நட்சத்திரத்திலும் குரு பூஜை நடைபெறுகின்றது.

ஆலய முகவரி: குரு நடேசனார், சுவாமி, இராமதாசர் சீவபீடம், திருவேற்காடு, சென்னை.

திருவேற்காடு அருள்மிகு கருமாரியம்மன் கோவில் எதிரில் உள்ள குளத்தின் அருகில் உள்ளது.

பேரூந்து மார்க்கம் : சென்னை : கோயம்பேடு, கிளாம்பாக்கத்தில் இருந்து திருவேற்காடு கருமாரியம்மன் கோவிலுக்கு வாசலுக்கே பேரூந்து வசதி உண்டு.

மின்சார இரயில் : சென்னை திருவள்ளூர்

இறங்குமிடம்: ஆவடி இங்கிருந்து பேரூந்து வசதி உள்ளது.

சித்தர்களின் சீவபீடத்தை வணங்கி நம் வாழ்வின் கர்ம வினைகளை குறைத்துக் கொள் வோம்.

(தரிசனம் தொடரும்)

அன்பே சாயி!



பாபாவின் அதிசயத்தை தான் வியந்து பார்க்கிறோமே தவிர அதன் உள்ளே ஊடாடும் அன்பை நாம் தரிசிக்க தவறுகிறோம்! பாபா நிகழ்த்தும் செயலின் அடிநாதமே அன்புதானே!

நம்மால் பாபா போல் எந்த அதிசயத்தையாவது செய்ய முடியுமா? ஆனால் நம்மால் அன்பு செலுத்த முடியும்!

பாபாவின் படத்தில் விபூதி வருகிறதா? பாபா அங்கே இருக்கிறார் என்கிறோம்! அப்படியானால் விபூதி வராத வீட்டில் பாபா இல்லையா? ஆக நமது புரிதல் மீண்டும், மீண்டும் அதிசயத்தை நோக்கியே நகர்கிறது! எப்போது அது அன்பை சார்ந்து நகர்கிறதோ அப்போதே அது சுத்த ஆன்மீகத்தை நோக்கி நகர்கிறது என்று அர்த்தம்.

முதலில் நமது வீட்டு நபர்களிடம் அன்பு செலுத்த தொடங்குங்கள். ஏனெனில் அன்பு தான் மாபெரும் சேவை என்பது நமக்குப் புரியும் போது தான் உண்மையான ஆன்மீகம் நமக்குள் இயங்க ஆரம்பிக்கும்! எல்லா ஆன்மீக இயக்கத்தின் அஸ்திவாரமும் பாபாவே! அன்பே பிரதானம்!! அன்பை இழந்து விட்டால் ஆன்மீகம் தனது ஆன்மாவை இழந்து விடும்.

தொடர் - 16

திருவருள் தேடி

நமது சாய் அன்பை நாடும் வாசகர்கள் அனைவருக்கும் சுந்தர் சாய் வணக்கத்துடன் திருவருள் தேடி வந்த அனுபவங்களில் போன இதழில் நமது புதிய வேலை மற்றும் அதில் இருந்த சவால்களைப் பற்றி அறிந்து கொண்டோம். அந்த வேலையில் நம்முடைய அனுபவத்தை முழுவதுமாக பயன்படுத்தும் விதமாய் நமக்கென்று ஒரு கிளை அலுவலகம் அமைக்க முடிவு செய்து அதற்கான ஆரம்ப கட்ட வேலைகளைத் துவங்கினேன்.

அந்த நேரத்தில் என் உதவியாளராக பெண் ஒருவரைத் திணிக்க முயற்சி நடைபெற்றது. அதை என்னால் தடுக்க முடியவில்லை. அந்த பெண் உதவியாளருக்கு அனுபவமும் இல்லை, ஆங்கிலம் தெரியாது எனவே நான் மறுத்தேன். அவரை வைத்து எமது நடைமுறைகளை கண்காணித்து, சபலத்தை ஏற்படுத்தி எம்மை அதில் சிக்க வைத்து நிர்வாகத்தை கையகப்படுத்துவது போன்ற அவர்களின்



யுக்திகளை சத்ய சாயி யின் அருளால் நான் ஏற்கனவே உணர்ந்திருந் ததால் மிகவும் கவனமாக இருந்தேன்.



சுந்தர் சாய்

என்னுடைய தன்மை யில் நான் வேலை மற்றும் பொறுப்பு விவகாரங்களில் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்பதால் அலுவலகத்தை ஒரே மாதத்தில் காலி செய்து மற்றொரு அலுவலகத்திற்கு மாற்றும்படியான சூழ்நிலை ஏற்பட்டது.

அங்கு நான் இழப்பதற்கு ஒன்று மில்லை – என் வேலையைத் தவிர. ஆனால் அவர்களுக்கு நான் மிகவும் தேவைப்பட்டேன். நான் வேலையை விட்டால், அங்குள்ள மார்கெட் நிலவரததில ஒரு சலசலப்பு ஏற்படும். மேலும் நான் அவர்களுக்கு போட்டியாக வேறு ஒரு கம்பெனியில் சேர்ந்து விட வாய்ப்பு உண்டு.

இந்த சமயத்தில் நான் வியாபார நிமித்தமாக வெளியூர் செல்ல வேண்டி வந்தது. ஆனால் லாட்ஜ், ஹோட்டல் போன்ற வசதிகள் அங்கு கிடையாது. எனவே எங்கள் வியாபார பிரதி நிதி ஒரு தெரிந்த நண்பர் வீட்டு மாடியில் தங்க ஏற்பாடு செய்து கொடுததார்.

அந்த வீட்டில் ஒரு வயதான மூதாட்டி மகள் மற்றும் பேரக் குழந்தைகளுடன் இருந்த னர். எனது டிரைவரும் அவர்கள் வீட்டில் தங்கி யிருந்தார். அவர் அந்த நாட்டுக்காரர் என்பதால் மிகவும் சகஜமாய் அந்த வீட்டில் உள்ளவர்களிடம் பழகினார். அவர் என்னு டன் ஆரம்ப காலத்திலிருந்து பழகுவதால் என்மீது தனிப்பட்ட அன்பும் மரியாதையும் உடையவர்.

அவர் எனது அலுவலகத்தில் நடந்த மாற்றங்கள் குறித்து அந்த இஸ்லாமிய மூதாட்டியிடம் விவரித்திருந்தார். அவர்கள் அனைவருக்குமே என்மீது ஒரு தனிப்பட்ட மரியாதை ஏற்படவே, எனக்கும் மூன்று வேளையும் மரக்கறி உணவு மற்றும் தேனீர் தயாரித்து வழங்கினார்கள்.

அந்த இஸ்லாமிய மத வழிபாட்டில் மிகவும் உறுதியா னவர். உறைபனிக் காலங்களிலும் காலை 2.30 – 3 மணிக்கு தொழுகை செய்யும் வழக்கமுடையவர் என் பதை அறிந்து எனக்கும் அவர்கள் மீது மரியாதை கலந்த அன்பு ஏற்பட்டது. நான் தினமும் குளிப் பதற்காக வெந்நீர் ஏற்பாடு செய்து, காலை உணவில் வெஜிடபிள் சாலட், தேன், ரொட்டி, கெட்டித் தயிர் மற்றும் பழ வகைகள் என தடபுடலாக ஏற்பாடு செய்து கவனித்துக் கொள்வார்கள்.


அவர்களது விருந்தோம்பல் இன்றளவும் நன்றியுடன் நினைத்து வணங்குகிறேன் நண்பர்களே. ஏனெனில் நல்ல உள்ளங்களில்

அல்லவா இறைவன் வாழ்கிறான்! மதங்களில் வேறுபட்டாலும் மதங்களில் ஒற்றுமையே தெய்வீகம் எனப்படும் இறைத்தன்மை என்பதை நமது பேரன்பிற்குரிய சாய் மகராஜ் நமக்கெல்லாம் எவ்வளவு அழகாகவும் நடைமுறை சாத்தியத்தோடும் போதிக்கிறார்.

அவற்றை வாழ்நாளில் அனுபவித்து உணர்ந்தவன் என்பதில் பெருமையுடன் போற்றுகிறேன். அன்றைய நாட்களில் நான் ஷீரடி பற்றியோ சாய் மஹராஜ் பற்றியோ அறியாதவன் நான். முழுவதும் சத்ய சாய் பகவானுடைய அளவில்லா கருணையை முற்றிலுமாக அனுபவித்துக் கொண்டிருந்த காலங்களில் வேறொன்றும் தெரியாது.

அவ்வன்பு மூதாட்டியாரும் தன்னுடைய அதிகாலை தியானக் காட்சியில் கண்டதாக எனது டிரைவர் மூலம் தெரிவித்த செய்திகள் என்னை அற்புதத்தில் ஆழ்த்தியது. அவர் சொல்கிறார் 'நான் மீர் மவ்சும் ஆகா' எனும் இஸ்லாமிய புனிதர் வீட்டில் அவருக்கு அளித்த சாக்லேட்டை அவர் அன்புடன் புசிப்பதாகவும், எனது அலுவலகத்தில் எனது இந்திய நண்பர்கள் பொறுமையுடன் துப்பாக்கி ஏந்தி என்னை குறி வைப்பது போலும் கண்டதாக உள்ளுணர்வு காட்சிகளாக விவரிக்கிறார்.

அத்துடன் அவர் எனக்கு மாந்த்ரீக முறையில் தொந்திரவு செய்ய எண்ணும் அதிகார வட்டத்தைக் கட்டுப்படுத்தி எனக்கு ஒரு பாதுகாப்பு செய்து விட்டு



என்னிடம் சொன்ன வார்த்தை – பரம சத்தியமாக எனக்கு ஏற்பட்ட அனுபவம். அவர் சொன்னார் – "இன்று முதல் நான் அலுவலகத்தில் நுழையும் சமயம் எதிர்மறை சக்திகள் வெளியேறி விடும். நான் அலுவலகத்தை விட்டு வெளியே உள்ள சமயம் மட்டுமே அவைகள் உள்ளே வரமுடியும்" நீ கவலைப்பட வேண்டாம் என்று உறுதியளித்தார்.

ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு இடங்களுக்கும் தகுந்தாற்போல் அங்கேயுள்ள சக்தி மிகுந்த நபர்களைக் கொண்டு நம்மை காப்பது என்பது எவ்வளவு பெரிய அனுபவம். அதுவும் நமது முயற்சி சிறிதளவுமின்றியல்லவா நிகழ்கிறது!

நானும் ஒவ்வொரு நாளும், சூழ்நிலை மாற்றம் ஏற்பட்டு நமக்குரியதான பொறுப்பான இடம் அந்த அலுவலகத்தில் கிடைக்கும்

என்ற நம்பிக்கையில் என் முழு சக்தியையும் உபயோகித்து எல்லா இடங்களுக்கும், வசதிக் குறைவு களை பொருட் படுத்தாமல் டூர் சென்று வியாபாரத்தில் முன்னேற் றங்களை கொணர்ந்தேன்.

பழைய பாக்கிகளை வசூல் செய்வது, சரிவர வேலை செய்யாத வியாபார பிரதிநிதிகளை களை யெடுத்து புதிய ஆட்களை நியமிப் பது, டிஸ்டிரிபூட்டர்களை தேர்வு செய்து நியமிப்பது, வழிநடத்துவது, மருத்துவர்கள் மற்றும் ஆஸ்பத்திரி யில் அறிமுகம், தொழில் ரீதியான நட்பு வட்டா ரத்தை உருவாக்குவது என எல்லா துறைகளிலும் ஒரு மதிக் கத்தக்க முன்னேற்றம் கண்டேன்

இருந்தாலும் மனதளவில் ஒரு குறை என்னவோ உறுத்திக் கொண்டே இருந்தது. ஆம்,! நமக்கென்று ஆரம்பித்த கிளை அலுவலகத்தை இன்னொரு அலுவல கத்துடன் சேர்த்து, அங்கு நடக்கும் தவறான சில நடவடிக்கைகளை தடுக்க முடியா மல் பொறுப்பு குறைப் பாட்டுடன் நாமுண்டு நம் வேலை யுண்டு என விட்டேத்தியாக வேலை செய்தது ஒரு நெருடலாக இருந்தது.

அச்சமயத்தில் ஓர் நாள் வேறு ஒரு திசையில் வியாபார நிமித்தமாக ஒரு வாரம் பிரயாணம் செய்ய வேண்டி வந்தது. அந்த இடம் நமக்கு பரிச்சயம் இல்லாத புதுஇடம் என்றாலும் அங்கு சென்று புதிய நபர்களை சந்தித்து, அங்கு முறையாக வேலை செய்யாத ஓர் உள்ளூர் பிரதிநிதியை வேலை நீக்கம் செய்து மற்றொருவரை அவருக்கு பதிலாக நியமித்து அவருக்கு தேவையான பயிற்சிகளை அளித்து ஒரு மன நிம்மதியுடன் திரும்பிக் கொண்டிருந்தேன்.

மார்கெட்டில் சென்று வாடிக்கையாளர் களை சந்திப்பது, டாக்டர்களிடம் உரையாடுவது, போட்டியாளர்களிடம் மோதி வியாபாரத்தைக் கைப்பற்றுவது என்பது என்பது நமக்கு மிகவும் பழக்கமான, இந்தியாவில் கற்றறிந்த கலையென்பதால் உற்சாகமாக அமையும்.

அவ்வாறு எல்லாம் நன்றாக முடித்து சனிக்கிழமை வந்து கொண்டிருந்த சமயம் நமது மனதில் அலுவலகம் திரும்ப வேண்டுமே என்ற கவலை தொற்றிக்கொண்டது. 5 மணிக்குள் ஊர் வந்து சேர்ந்தால் அலுவலகம் செல்ல வேண்டும். இல்லையென்றால் திங்கள் கிழமை காலை வரை நிம்மதியாக ஓய்வெடுத்து, பின்னர் அலுவலகம் செல்லலாமென்ற மன ஓட்டத்தில் பயணித்துக் கொண்டுந்தேன்.

திடீரென ஒரு ஃப்ளாஷ் என்று உணருமளவிற்கு ஒரு இனம் புரியாத உற்சாகம் நம்மைத் தொற் றிக் கொண்டு நம்மை 'இருப்புக் கொள்ளாமை' என்கிற புதிய அனுப வத்தை பொழிந்தது. அதில் சிறிதள வேனும் உங்களுக்கும் அளிக்க விரும்புவதால்,மீண்டும் அடுத்த இதழில் தொடர்வோம் சாய்ராம்!

குரு வாழ்க! குருவே துணை!!

எல்லாம் சாயி!சாயியே எல்லாமும்!!

– தொடரும்.

தொடர் - 39

சாய் சரவணன்

அதிதேவதை




ஸ்ரீ சச்சிதானந்த சத்குரு நாதனின் பெருமைகளை எவ்வாறு அடியேன் பாடுவேன். குருநாதன் அருள் இன்றி இம்மனம் அவரை நினைக்குமா! அவர் திருநாமம் சொல்ல இயலுமா! எத்தனையோ ஜென்மங்கள் அடியேன் செய்த பாக்கியம் அடியார்களினால் "அழியா நிதியான சாய் நாதரின் திருவடியைக் கண்டு கொண்டேன்" குருவின் திவ்ய சரணத்தை எனக்கு காட்டிய அடியார்களுக்கு அடியேன் என்ன கைமாறு செய்வேன்.

அவர்களது திருவடிதனில் என் சிரஸை வைத்து வணங்குவதை விட வேறு எதுவும் செய்ய இயலாது. அடியேனை தன்னுடையவனாகக் கொண்டு சாயிநாதரும், அன்னையும் தன் சரிதையை தானே எழுத வைக்கிறார், கருவி மாத்ரமே அடியேன்! குருவின் அருள் கண்களுக்கு புலப்படாது அல்லவா? அதுவே அடியேனுக்கு உற்ற துணையாய் நின்று அன்னையின் சரிதத்தை எழுத வைக்கிறது! கதைக்குச் செல்வோம்.

1910 லிருந்து ஷீரடியில் இராதாகிருஷ்ணமாயியின் பிரேம பக்தியின் விளைவாக சாயிநாதருக்கு ஆரத்தி வழிபாடு, குரு பூர்ணிமா திருவிழா, சாவடி ஊர்வலம், கீர்த்தனைகள் என யாவும் புகழ்பெற்று வெளிவந்த காலம் அது.

மேலும் ஷீரடியின் புகழும், சாயி நாதரின் புகழும் பெரிய அளவிலான ஆன்மீக சாம்ராஜ்யமாக திகழவும், ஷீரடி சமஸ்தானமாக உருவெடுக்கவும், ருணானுபந்தம் காரணமாக விட்டுப் போன மிச்சமிருந்த புண்ணியத்தின் விளைவாக சாயிநாதரின் திவ்ய தரிசனம் காண அடியவர் கூட்டம் ஷீரடிக்கு வரத்தொடங்கியது. முக்கியமான பெரும்புள்ளிகளை தனது அடியவர்களை தன் அடியவர் மூலம் ஷீரடிக்கு இழுக்க பாபா



சங்கல்பம் கொண்டார்.

1910ல் ஸ்ரீ தாஸ்கணு மகராஜ் பாபாவின் புகழை பிரச்சாரம் செய்தார். அவரது கீர்த்தனையில் தன் வசம் இழந்து சாயிநாதரை காண ஷீரடிக்கு ஓடி வந்தார். திரு. தோசர் என்பார் பாபாவின் பேரரு ளால் சன்யாசம் பெற்று "நாராயண் ஆச்ரம்" என்ற திருநாமத்தோடு விளக்கினார்.

திரு. அண்ணாசாஹேப் தபோல்கர், காகா சாஹேப் தீட்சித் மற்றும் நானா சாந்தோர்கரின் வற்புறுத்தலால் ருணாணு பந்தம் என்ற அடிப்படையில் ஷீரடிக்கு வந்தார். இவர் "சாயிசத்சரித் திரத்தின்" ஆசிரியராக விளங்கும்படி பாபா அருள்புரிந்தார்.


பி.வி.தேவ் அவர்கள் நானா சாஹேப் சாந்த்தோர்கர் மூலம் தூண்டப்பட்டு பாபாவைக் காண ஷீரடிக்கு வந்தார். பிறகு பாபாவின் மிக நெருங்கிய பக்தர் ஆனார்.

ஸ்ரீமான் கோபால்ராவ் பூட்டி இவர் S.B. துமால் அவர் களினால் பாபாவிடம் அழைத்து வரப்பட்டவர். மேலும் தத்த அவதாரி ஆன கஜானன் மகராஜ் அவர்களின் ஆணைக்குட்பட்டே ஷீரடிக்கு வந்து பாபாவின் கருணையைப்பெற்றனர். 1913ல் பூட்டி அவர்களின் மருமகனிடம்

இடைவேளை

கர்மாவுக்கும் அருளுக்கும் சிறிதுதான் வித்தியாசம்! எந்த வகையிலும் ஆபத்து நேர்ந்தால் அது கர்மா, அதில் இருந்து எந்த வகையிலாவது காப்பாற்றப்பட்டோம் என்றால் அது அருள். அந்த அருளைப் பெறுவதற்கு நாம் கொஞ்சமாவது புண்ணியம் செய்திருக்க வேண்டும்!

பகவான் பாபாவின் அருள் எல்லை இல்லாதது.அதில் சந்தேகமே இல்லை ஆனால் பாத்திரத்தின் அளவை கர்மாவே தீர்மானிக்கிறது! சென்ற ஜென்மங்களில் எப்படி நடந்து கொண்டோமோ அதை வைத்தே இந்த ஜென்மத்தின் வாழ்க்கை அவரவர்க்கு வித்தியாசப்படுகிறது. ஆயினும் இந்த ஜென்மத்தில் நாம் செய்து வருகிற நன்மை நமது வாழ்வினை மாற்றி அமைக்க பாபாவின் அருளை அழைத்து வருகிறது!



யாருக்கேனும் நாம் எந்த விதத்திலாவது துயரம் கொடுத்தால், அது மீண்டும் நமக்கே வந்து சேர்கிறது! இந்த பூமியில் எது செய்தாலும் திரும்ப வருகிறது. அது தான் கர்மா! இந்த கர்மவிதியை தெரிந்து கொள்ளாமல் தான் மனிதன் வாழ்க்கையில் இறங்கி விளையாடுகிறான்! செயலுக்கான விளைவு ஒரு வாழ்வில் முடிவதில்லை, அது பல ஜென்மமாக தொடர்ந்து வருகிறது! மரணத்தால் எதுவும் முடிந்துவிடுவதில்லை! அது ஒரு சிறு இடைவேளை மட்டுமே!

பாபா "உனது மாமனார் பூட்டி ஓர் கற்கட்டிடம் கட்டுவாரென்றும், பிற்காலத்தில் அதன் பொறுப்பை அவர் நிர்வகிப்பார் என்றும் வாக்கு தந்தார். அது பலிக்கவும் செய்தது.

"திவான் பகதூர் கணேஷ் ஸ்ரீ கிருஷ்ண கபர்டே" இவரும் ஸ்ரீ கஜானன் மகராஜின் தொடர்பில் இருந்தவர். ருணானுபந்தம் காரணமாக 05.12.1910ல் சாயிதர்சனம் கிட்டி அவர் அருளைப் பெற்றார். இப்படியாக சாயிநாதர் காசிநாத், உபாசினி மகராஜ், புரந்தரே, சாந்தாராம் பலவந்த் நாசனே, பீஷ்மா, தாராபாய் சதாசிவ தர்கட், எம்.பி. ரேகே, வாமன் ராவ் படேல், ஜீ.ஜீ. நார்கே, யஸ்வந்த் ஜனார்தன் கால் வாங்கர், பி.ஆர். அவஸ்தி, சகுண்மேரு நாயக் என எண்ணற்ற பக்தர்களை ஷீரடிக்கு சாயிநாதர் இழுத்தார்.

அடியார்கள் எவ்வாறு இழுக்கப்பட்டார்கள் என்று சாயிசத்சரிதையிலும், நரசிம்மசுவாமி எழுதிய சாயிபாபாவின் வரலாறு என்ற நூலில் இருந்து பார்க்கவும். மேலே குறிப்பிட்ட சில அடியார்கள் யாவரும் இராதாகிருஷ்ணமாயினால் உருவாகப் போகும் சாயிசனஸ்தானில் பல விதமான நிர்வாகப் பொறுப்புகளை பார்த்துக் கொள்வார்கள் என்று எப்போதோ சாயிநாதருக்கும், ஆயிக்கும் நன்கு தெரிந்தே இருந்தது.

நம் இராதாகிருஷ்ணமாயி எடுத்துக் கொண்ட மஹாசங்கல்பத்தில் சிலவற்றை தொடங்கி அதில் வெற்றியடைந்ததை கண்டோம். இப்போது ஆயி பண்டரியில்

நடக்கும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழாவை ஷீரடியில் நடத்திட எண்ணம் கொண்டாள். ஆயியை பொறுத்தவரை சாயியே ஸ்ரீ கிருஷ்ணன் என்பதில் திட நம்பிக்கையும் மற்றும் ஆத்மானுபவமும் ஆகும்.

ஆகையால் ஷீரடியிலே ஸ்ரீ பாண்டுரங்கனின் சம்பிரதாயமான கீர்த்தனைகள், உபன்யாசங்கள், சத்சங்க வகுப்புகள் எனப் பல ஆன்மீக சம்பந்தமான புது புது செயல்பாடுகளை ஆயி உருவாக்கிக் கொண்டே இருந்தாள்.

ஸ்ரீ கிருஷ்ணர் கோகுலத்தில் வளர்ந்த போது அவருக்கு எப்படியெல்லாம் பிறந்த நாளின் வைபவத்தை யாவரும் கொண்டாடினார்களோ அதேப் போல் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் ஷீரடியில் ஸ்ரீ கோகுலாஷ்டமி விழா நடக்க வேண்டும் என தீர்மானித்து நினைத்ததைச் செய்து முடிக்க ஆயத்தமானாள் இராதா கிருஷ்ணமாயி!

மேலும் பாபாவின் அடியார்கள் யாவரையும் அழைத்து கலந்து ஆலோசித்து ஷீரடியில் கிருஷ்ண ஜெயந்தி விழா கொண்டாடப்படும் உன்னதமான விஷயங்களை எடுத்துக் கூறினாள். ஆயி பாபாவிற்கு செய்ய நினைக்கும் பல காரியங்களில் அடியார்களின் விருப்பம் தாராளமாக இருக்கும். காரணம் ஆயியின் குருசேவையின் மகத்துவம் மற்றும் அயராத சேவையின் உன்னதத்தை உணர்ந்தவர்கள். அடியார்கள் சம்மதம் தெரிவித்தனர் என்றாலும் பாபாவை அவ்வளவு எளிதில் சம்மதிக்க வைக்க இயலுமா என்ன?

ஆயி அடியார்களை விட்டே பாபாவிடம் அனுமதி கோர தூண்டி விட்டாள். அடியார்கள் மசூதிக்குச் சென்றனர். ஆயியும் மசூதியின் ஒரு மூலையில் ஒரு பக்கமாக நின்றாள். அடியார்கள் பாபாவிடம் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழாவைப் பற்றி பயந்து கூற, எதற்கும் முரண்டு பிடிக்கும் பாபா வழக்கத்திற்கு மாறாக ஆகட்டும் என அனுமதியை தந்துவிட்டார்.

பிறகு என்ன ஷீரடியில் கிருஷ்ண ஜெயந்தி விழா தொடங்குவதற்கு ஆயி எல்லா ஏற்பாடுகளையும் பாபாவின் அடியார்களைக் கொண்டே சிறப்பாக செய்ய பிரேமையோடு திட்டம் தீட்டினாள். ஸ்ரீ கிருஷ்ணர் பிறந்தநாளும் வந்தது. இராதா கிருஷ்ணமாயி பிரேமையே உருவானவள் ஆதலால் பாபாவின் மசூதியை பிருந்தாவனமாக, கோகுலமாக பாவித்து துவாரகாமாயியில் பலவித அலங்கார திரைச்சீலைகள் கட்டப்பட்டது.

வாசனை மிகுந்த மலர்களை ஆயி வெளியூர்களிலிருந்து வரவைத்து மசூதி எங்கும் வாசனைப் பூக்களைக் கொண்டு அலங்கரிக்க வைத்தாள். மசூதியின் வாசலில் விசாலமாக வண்ண கோலமிட்டு, பாபா வைத்த துளசி மேடையையும் அலங்கரித்து யாவரும் வியக்கும் வண்ணம் அலங்கரித்தாள்.

(தொடரும்)



உடல் எடையைக் குறைக்கும் கொடம்புளி

நாம் இப்போது பயன்படுத்தும் புளி கடந்த சில நூற்றாண்டுகளாகத்தான் பயன்படுத்துகிறோம். ஆனால் கொடம் புளிதான் பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. இது செடிகளில் விளையும் புளி. பார்க்க தட்டையான சதைப்பற்றுடன் கூடிய பூசணிக்காய் வடிவத்தில் இருக்கும். இது பழமானதும் காயவைத்து பயன்படுத்தப்படுகிறது.

நாம் இப்போது பயன்படுத்தும் புளிதான் பல நோய்களுக்கு காரணமாக இருக்கின்றது. எனவே அதற்குப்பதில் கொடம்புளியைப் பறன்படுத்தினால் பல நோய்களில் இருந்து நம்மை காத்துக் கொள்ளலாம்.

இது புளிப்பு சுவையோடு துவர்ப்பு சுவையும் கொண்டது. ஆயுர்வேதத்தில் கொடம்புளி மற்றும் கொள்ளு ஆகியவை உடல் எடையை குறைக்கும் இரண்டு முக்கிய பொருள்களாக பார்க்கப் படுகிறது. அதன் சுவை மற்றும் வாசனைக்காக கேரளா சமையல் உணவுகளில் பயன்படுத்தப்படுகிறது. இதன் ஆரோக்கிய நன்மைகள் குறித்து பார்க்கலாம்.

உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் சிறு நெல்லி அளவு கொடம்புளியை எடுத்து நீரில் ஊறவைக்க வேண்டும். அதில் மூன்று பங்கு நீர் எடுத்து கொதிக்கவிடவும். பிறகு அதை இறக்கி குளிரவைத்து உணவுக்கு முன்பு அரை டம்ளர் வீதம் என மூன்று வேளையும் குடித்து வரவும். அதிக அளவு வேண்டாம்.

கொடம்புளி எடுத்துகொள்வதன் மூலம் குடல் இயக்கம் சீராகிறது. அஜீரணம், அமிலத் தன்மை, இரைப்பை போன்ற பிரச்சனைகள் கட்டுப்படுத்தப் படுகிறது. அஜீரணக்கோளாறு இருப்பவர்கள் கொடம்புளியை தினசரி உணவில் சேர்த்து வந்தால் பலன் கிடைக்கும்.

எரிச்சலூட்டும் குடல் அறிகுறி

களை கொண்டிருப்பவர்கள் தினமும் அரை டம்ளர் வெதுவெதுப்பான நீரில் கொடம்புளி சாறு கலந்து வெறும் வயிற்றில் குடித்து வந்தால் அறிகுறிகள் கட்டுப்படும்.

மலச்சிக்கலுக்கு முந்தையை இறுக்கமான மலம் கழித்தல் காலத்தில் தளர்வான மலம் கழிக்க கொடம்புளி உதவும். இது மலத்தை இளக்கி வெளியேற்றுகிறது. மேலும் வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்தவும் உதவுகிறது. மலச்சிக்கல் கொண்டிருந்தால் வெதுவெதுப்பான நீரில் கொடம்புளி கூழ் கலந்து குடித்து வந்தால் நிவாரணம் கிடைக்கும்.

கொடம்புளியை சாறாக்கி குடித்து வந்தால் நீரிழிவு நோய் வகைகளை கட்டுப்படுத்த செய்கிறது. மேலும் தீவிரமாகாமல் தடுக்கிறது. கொடம்புளி சாறு குடிப்பது புற்றுநோயை எதிர்த்து போராட உதவும்.

கோடைக்காலங்களில் இயற்கை பானமாக இவை செயல்படும். கோடையில் உடலை குளிர்ச்சியாக வைத்துகொள்ளும் இயற்கை பானங்களில் கொடம் புளி பானமும் ஒன்று.

கொடம்புளியில் இருக்கும் கார்சினோல் ஆனது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. இது அழற்சி எதிர்ப்பு செயல்பாட்டை கொண்டுள்ளதால் பக்கவாதத்திலும் பயன்படுத்தப் படுகிறது.

கர்ப்பகாலத்தில் தாய் மற்றும் குழந்தையின் ஊட்டச்சத்து அதிகரிக்க இதனைப் பயன்படுத்தலாம்.

முட்டுவலி மற்றும் கருப்பை நோய்கள் உள்ளவர்களுக்கு கொடம் புளி பழத்தின் கஷாயத்துடன் சிகிச்சை அளிக்கபடுகிறது.

கூந்தல் வளர்ச்சியில் சரியான முறையில் இதை பராமரிக்கும் போது இது உச்சந்தலை முடியின் துளைகளை அடைக்காது மேலும் இரத்த ஓட்டத்தை மேம்படுத்துவதால் ஆரோக்கியமான முடி வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

வெடிப்பு குணமடைய ஆயுர் வேதத்தில் கொடம்புளி வெண் ணெய் பயன்படுத்தப்படுகிறது. இதை பசு நெய்யுடன் கலந்து பயன் படுத்தினால் உதடுகள் வறட்சியில் லாமல் மென்மையாக இருக்கும்.

யூர்டிகேரியா என்னும் தோல் அழற்சி நோய், படை நோய் போன்ற வற்றுக்கு சிகிச்சை யளிக்க குடம்புளி பயன்படுத் தப்பட்டுவருகிறது. அரை டீஸ்பூன் கொடம்புளி வெண்ணெ யுடன் அரை டீஸ்பூன் பாதாம் எண்ணெய் கலந்து பாதிக்கப்பட்ட இடத்தில் தடவினால் தோல் ஒவ்வாமை பிரச்சனை நீங்கும்.

கொடம்புளியை நாம் தொடர்ந்து பயன்படுத்தினால் பல்வேறு நோய்களில் இருந்து விடுபட முடியும். ஆனாலும், கொடம்புளியை குறைந்த அளவே பயன்படுத்த வேண்டும். எப்படி என்றால் நாம் அன்றாடம் பயன்படுத்தும் புளிக்குப் பதிலாக கொடம்புளியை உபயோகப் படுத்தினாலே போதும்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●





செங்கோல் சிம்மாசன பட்டாபிஷேக விழா!

பேரன்பு மிக்க பாபாவின் அருளால் 29.8.2024 அன்று பழைய சீவரம் ஸ்ரீ சீரடி சாய்நாத் மகராஜ் ஆலயத்தில் பாபாவிற்கு செங்கோல் சிம்மாசன பட்டாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைப்பெற்றது.

விமான பயண நேர மாற்றத்தினால் நேர்ந்த சில குழப்பங்களையும் மீறி நம் முக்கிய விருந்தாளியான திரு. சுலாகே மஹராஜ் பாபாவின் அருளால் நிகழ்ச்சியின் முன் தினம் சீரடியில் இருந்து சென்னை வந்தடைந்தார்.

திரு.சுலாகே மஹராஜ் ஷீரடி சமஸ்தானத்துடன் நாற்பது ஆண்டு காலமாக, அதாவது ஆரம்ப காலமான 1982 முதல் தற்கால மகத்தான வளர்ச்சி அடைந்த 2022 வரை இணைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. சுலாகே மஹராஜ் பாபாவின் படிப்பினை மற்றும் கோட்பாடுகளான எளிமை, தன்னடக்கம், பேரன்பு மற்றும் பணிவின் வாழும் பிரதிநிதியாக விளங்குகிறார். மூர்த்தி சிறிதாக இருப்பினும் அவர் ஆன்மீக வீச்சு பல மடங்கு விசாலமாக உள்ளது.

சென்னையில் அவர் பல ஆலயங்கள் சென்ற போது அவருக்கு அளிக்கப்பட்ட மரியாதை மற்றும் அன்பின் வெளிப்பாடை ஏற்கும் அவரது பணிவு மற்றும் பாபாவிடம் அவருக்குள்ள அர்ப்பணிப்பை நாம் கண்கூடாக காண முடிந்தது.

பேரன்பு மிக்க பாபாவின் மறை அருள் மற்றும் குருமஹராஜ் பிரம்மரிஷி மோகன்ஜியின் ஆசீர்வாதத்தால் திரு.சுலாகே மஹராஜ் போல் மதிப்பும் மரியாதையுமிக்க பெருமான், நகரத்தில் இருந்து தள்ளி கிராமத்தில் அமைந்த நமது பாபா ஆலயத்திற்கு வருகை புரிந்து அதில் மட்டற்ற மகிழ்ச்சியும் கொண்டதாக கூறினார். பாபா எளிய கிராம மக்களிடையே வாழ்ந்து மறைந்தார் என்பதையும் அவர் குறிப்பிட தவறவில்லை.

கோயில் சார்பாக மலர் மற்றும் மாலை அலங்காரம் செய்யப்பட்ட போதிலும் பக்தர்கள் தமது அன்பின்

திரு. ஸ்ரீனிவாசன்

வெளிப்பாடாக மலர்கள் மற்றும் தொடுக்கப்பட்ட மாலைகளால் பாபா சன்னதியை நிரப்பி விட்டார்கள். இதை கண்ட நம் பூஜாரி திரு. ரவி குருக்கள் அவற்றை யெல்லாம் சமயோசித மாக பாபாவை சுற்றிலும் அணி வித்து அலங் கரித்தார். பாபாவின் அழகு கண்கொள்ளா காட்சியாக அன்று விளங் கியது என கூறத்தான் வேண்டுமா?





ஒரு பக்கம் பாபாவின் சன்னதி வண்ண வண்ண பூக்களால் அலங் கரிக்கப்படும் போது நம் அன்புள்ள பக்தர்கள் கோயில் வாசலிலும், வழி நெடுங்கிலும் வண்ணமிகு ரங்கோலி கோலங் களால் அலங்கரித்து விட்டார்கள்.

சிம்மாசனம் மற்றும் செங்கோல் சமர்ப்பண விழா முடிவுறும் தறுவாயில் வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் பாபாவின் பாதுகா அபிஷேகத்தை அனுமதித்து, திரு சுலாகே மஹராஜ் அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டார். பக்தர்களின் மகிழ்ச்சி யான மலர்ந்த முகங்களே அதை பறை சாற்றின.

நிகழ்ச்சிக்கு முன்பும் பின்பும் அயராத சேவையில் ஈடுபட்ட தொண்டர்கள் மற்றும் நாதஸ்வர, சமையல் குழு அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். பாபா மீது நமக்குள்ள அன்பு மற்றும் அவரின் பேரருளே நம்மை பிணைக்கும் பாலமாக விளங்கியது.

பாபாவின் நல்லாசியின் சாட்சியாக ஆன்மீக முதிர்வுள்ள பல அடியார்கள் நம் கோயில் நிகழ்ச்சியில் அன்புடன் இணைந்து பங்கேற்றார்கள். திரு சுலாகே மஹராஜ் தவிர ஷீரடியிலிருந்து "வாழும் பாபா" திரு. அச்சுதானந்த சுவாமி, திரு. சுந்தர் சாய் மற்றும் 'சாய் மகராஜ் குருவை தேடி' ஆன்மீக மாத இதழின் ஆசிரியர் திரு. ஸ்ரீராம் சாயி ஆகியோர் அவற்றில் குறிப்பிடத்தக்கவர்கள்.

பட்டாபிஷேக விழாவை தொடர்ந்து சுப சகுனமாக சுமார் 30 நிமிடம் வானம் பிளந்தது போல் மழை கொட்டி அனைவ ரின் நெஞ்சங்களையும், பூமியையும் குளிர்வித்தது. தொடர்ந்து நடந்த சுவையான அன்ன தான மகா பிரசாதத்துடன் நிகழ்ச்சி இனிதே முடி வுற்றது.

கோயில் நிர்வாக குழுவின் சார்பாக சேவையில் ஈடுபட்ட அன்பார்ந்த பக்தர்கள் மற்றும் விழாவில் பங்குகொண்ட அனை வருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டு, தாயன்புடன் நம் அனைவரையும் காத்து வழிநடத்தி சென்ற சாயிநாத் மஹராஜின் பொற்பாதங்களுக்கு எமது நமஸ்காரத்தினை சமர்ப்பிக் கின்றேன்.

106 வது மஹா சமாதி தினம்

அன்புள்ளம் கொண்ட சாய் அன்பர்கள் அனைவருக்கும் நமது சமர்த்த சத்குரு சாய் மஹராஜின் மஹா சமாதி தின, விஜய தசமி நல்வாழ்த்துக்கள்.

இந்த விஜய மஹா சமாதி நன்னாளில் நமது கருணைக் கடலான சாய் மஹராஜ் நமக்கு அருளியிருக்கும் மிக விஷேசமான சாய் சத்சரித பாராயணம், அன்னதானம் மற்றும் மதியம் சுமார் 2 மணிமுதல் தீபம் ஏற்றி அத்தியாயம் 42, 43, 44 பாராயணம் செய்வது, சத்சங்கம் நடத்துவது மற்றும் அவர் நாமம் சொல்வது என அவரது ஆத்மாவுடன் ஒன்றிய நினைவுகள் நம் அனைவருக்கும் ஒரு புத்துணர்வு அளிக்கும் தெய்வீக அனுபவம் என்றால் அது மிகையல்ல!

இன்றளவும் சாய்மஹராஜை ஷீர்டியிலுள்ள அவரது சமாதி மந்திரில் தரிசனம் செய்த, செய்யும், செய்ய விரும்பும் பக்தர்கள் பல கோடி நபர்கள் உலகெங்கும் இருக்கிறோம். பாபா மஹா சமாதியடைந்து சுமார் 36 ஆண்டுகள் அவரது வரைபடம் மட்டுமே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

1954 ஆம் ஆண்டு விஜய தசமி நன்னாளில் தான் நம் அனைவரையும் இன்றளவும் கவர்ந்து ஈர்க்கும், கண்ணீர் மல்க வைக்கும் இனி மீண்டும்


சிற்பி பாலாஜி தாலிம்

எப்பொழுது தரிசிப்போம் என ஏங்க வைக்கும் சாய் மஹராஜின் பளிங்கு மூர்த்தி சமாதி மந்திரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த அற்புதத்தை நினைவு கூறவே இப்பதிவு சாய்ராம்.

சுமார் 1952 ஆம் வருடம் "அண்ணா சாஹேப்" என அன்புடன் அழைக்கப்படும் மதிப் பிற்குரிய சாய் பக்தர் டாக்டர் கேசவ் கவான்கர் என்பவர் ஷீரடி சாய் சமஸ்தானத்தின் தலைவர் பதவி வகித்தார். அவர் தலைமையில் இருந்த நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கூடி சாய் சமாதியில் இருந்த வரைபடத்திற்கு மாற்றாக சிலை வடிவில் பாபா வின் உருவத்தை நிறுவ முடிவு செய்யப்பட்டது.



சுந்தர் சாய்

இத்தாலியிலிருந்து ஒரு பெரிய வெள்ளை மார்பில் பம்பாய் இறக்குமதி கட்டிடத்திற்கு வந்திருந்து அதை யாரும் உரிமை கோராததால் உயரதிகாரிகள் அதை ஏலத்தில் விற்க முடிவெடுத்தனர் அதை ஒரு உன்னத அன்பர் ஏலத்தில் எடுத்து ஷீரடி சமஸ்தானத்திற்கு அன்பளிப்பாக வழங்கவே, கடவுளின் திட்டம் நிர்வாகக் குழுவினர்களின் எண்ணத்தில் உதித்து ஒரு அழகான உயிரோட்டமுள்ள சாயி மூர்த்தியாக வடிவேறியது.

அந்த வெள்ளைப் பளிங்கு கல்லைப் பெற்ற சமஸ்தான அதிகாரிகள் உடனே சுறு சுறுப்புடன் கூடி விவாதித்து மிகவும் பிரசித்தி பெற்ற சிற்பிகளின் பெயர்களைத் தேர்வு செய்து அவற்றில் மூன்று பிரபலமான சிற்பிகளின் பெயரை பாபாவின் முன் குலுக்கல் முறையில் தேர்வு செய்ய "திரு. பாலாஜி தாலிம்" என்பவரின் பெயர் முடிவானது.

எனவே பாபாவின் விருப்பப்படி திரு. பாலாஜி தாலிம் அழைக்கப்பட்டு அந்த அற்புதமான வாய்ப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. அவரது தொழில் கூடம் (Studio) மும்பையிலுள்ள கிராண்ட்ரோடில் (Grant Road) அமைந்திருந்தது. இதில் பெரிய ஆச்சர்யமென்னவெனில், திரு.டாக்டர் அண்ணா சாஹேப்பின் கிளினிக் மிகவும் சமீபமாக அமைந்ததுவே.

இதனால் சிலை வடிக்கும் வேலையை அடிக்கடி சென்று மேற்பார்வையிட அண்ணா சாஹேப்பிற்கு மிகவும் எளிதாய் இருந்தது. இதில் மிகவும் முக்கியமான விஷயம் என்னவென்றால் அண்ணாவிடம் பாபாவின் ஒரேயொரு கருப்பு வெள்ளைப் படம் மட்டுமே இருந்தது.

பாலாஜி தாலிம் அவர்களும் பாபாவின் உருவத்தை வடிக்கும் வேலையில் மிகவும் ஈடுபாடு கொண்டு வேலையில் மும்முரமாக இருந்த தருணத்தில், பாபாவின் முக பாவத்தை வடிவமைப்பதில் சிரமம் ஏற்பட்டதால், அவர் அண்ணா சாஹேபை அழைத்து, பாபாவை தாங்கள் கண்டிருந்ததால் அவரது முக அமைப்பைப் பற்றி, முக்கியமாக அவருடைய கண்கள், மூக்கு இவற்றின் அமைப்பை விவரிக்குமாறு வேண்டினார்.


அண்ணாவும் தனக்கு அப்பொழுது (12) பன்னிரண்டு வயதே ஆகியிருந்ததால், என்னால் அவ்வளவு நுணுக்கமாக விவரிக்க இயலவில்லை என வருந்தினார். தாலிம் அவர்கள் மிகவும் உற்சாகத்துடன் பாபாவின் உருவமைப்பு மிக நன்றாக அமைய வேண்டும் என்பதில் தீவிரமான உறுதியுடன் செயல்பட்டார். எனவே மிகுந்த அக்கரையுடனும்,

பக்தியுடனும் பாபாவின் உதவியை வேண்டி பிரார்த்தனை செய்தார்.

மன உறுதியுடனும், மிகுந்த நம்பிக்கையுடனும் பிரார்த்தனையை செய்து பொறுமையுடன் காத்திருக்க, பாபாவும் அவருடைய வாக்குப்படி அற்புதங்களை நிகழ்த்த ஆரம்பித்தார். ஒரு நாள் காலை தன் ஸ்டூடியோவிற்கு சென்று வழக்கம்போல் தாலிம் அவர்கள் கதவைத் திறக்க அவர் கண்ட அற்புதக் காட்சி "ஒரு தெய்வீகமான ஒளி" பாலாஜி தாலிம் அவர்கள் எவ்வளவு பாக்கியம் செய்தவர்! அவரது அன்பிற்கும் வழிபாட்டிற்கும் மதிப்பளித்து அந்த தெய்வீக ஒளிவட்டத்தில் நமது ஷீரடி சாய் காட்சியளித்து தன் முக அமைப்பை தெளிவாகப் புரியும்படி முகத்தை பல கோணங்களில் காணும்படி தரிசனம் செய்து அருளினார்.

அந்த அற்புதக் காட்சியில் திளைத்த தாலிம் முக அமைப்பை நன்றாக மனதில் பதிய வைத்துக் கொண்டார். அண்ணா அவர்கள் பார்வையிட வந்தவுடன், தன் உணர்ச்சிப் பெருக்கால் தாலிம் அவர்கள் கண்ணீர் பெருக தனக்கு கிடைத்த அற்புத தரிசனத்தைப் பற்றி "டாக்டர் எனது கவலை தீர சாய்மகராஜ் புனித தரிசனம் தந்து தன் முக அமைப்பை நன்றாக புரியும்படி உணர்த்தினார் என்று கரைந்து திளைத்தார்.

அண்ணா சாஹேப் உடனடியாக பாபாவின் சிலை வடிவான மூர்த்திக்கு உடனே ஆரத்தி செய்யுமாறு பணித்தார்.



அந்த நொடிப்பொழுது முதல் சிலை வடிப்பதில் எந்த ஒரு தடங்கலுமின்றி உத்வேகமாக பணி நடந்து முடிந்தது. பூரணமாக உருவாகிய பளிங்கு சிலை எல்லா வித எதிர்பார்ப்புகளையும் கடந்து ஒரு அற்புத தெய்வீக ஈர்ப்புடன் கூடிய சாய் மூர்த்தியாக வடிவெடுத்தது.

எல்லா உறுப்பினர்களுக்கும் தாங்களே அதை முன்னின்று பிராணப் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்ற எண்ணம் உருவானது. அண்ணா சாஹேப்பின் தலையீட்டால் போட்டி மனப்பாங்கு மறைந்து, வழக்கம்போல் பாபாவிடம் சீட்டு போட்டு யாரை பாபா தேர்வு செய்கிறாரோ அவர்தான் சடங்குகளில் முதன்மையான பங்கு வகிக்க வேண்டும் என முடிவானது.

அனைவரும் ஒரு மனதுடன்

ஒத்துக்கொண்டு சீட்டு போட்டதில் பாபாவின் தீர்வாக "அண்ணா சாஹேப்" பெயர் முடிவு செய்யப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் தொடங்கியது. 1954, புனித தசரா நன்னாளில் அண்ணா சாஹேப், துணைவியுடன் சம்பிரதாய சடங்குகளில் முன்னின்று கலந்து கொண்டார்.

துறவியான 'சரணானந்த ஜி' அவர்கள் திரை நீக்கம் செய்ய அனைவரும் ஷீர்டி மகராஜ் சாய் நாதரை தரிசனம் செய்ய தொடங்கினர். கடந்த 71 ஆண்டுகளாக நம் உள்ளம்கவர்ஷீர்டிசாய்பாபாகம்பீர மூர்த்தியாக அமர்ந்த நிலையில் தன் தர்பாரிலிருந்து உலகளவில் பரிபாலனம் செய்து வருவது நம் எல்லோரது அனுபவமே.

ஏழை, பணக்காரர், படித்தவர் படிக்காதவர், ஆண் பெண் வயது வித்தியாசம் என எதுவுமின்றி 'சாய் ராம்' என உள்ளன்புடன் அழைக்கும் அனைத்து பக்தர்களின் குரலுக்கும் செவி சாய்க்கும் உயிரோட்டமுள்ள ஷீர்டி சாய் மகராஜ் மூர்த்தியை தரிசனம் செய்யும் ஒவ்வொரு ஜீவனுக்கும் ஆறுதலளித்து அன்புடன் வழி நடத்த இப் பூவுலகில் வேறு யார் உள்ளார் சாய் சொந்தங்களே? இரு கரம் கூப்பிசிரம் தாழ்த்தி நம் உயிரின் உயிரான நமது ஷீரடி சாயி மஹராஜை காதல் செய்வோம் வாரீர்.

சாயியே எல்லாம்! எல்லாமுமே சாயி! குரு வாழ்க! அவர் திருவே துணை!

அன்பு



வார்த்தைகளை தண்ணீரைப்போல் பயன்படுத்தாமல் தங்கத்தைப் போல் பயன்படுத்தவேண்டும். எண்ணங்களை வைரங்கள் போல் குறைவாகவே வைத்திருக்க வேண்டும்! அளவுக்கு மீறிய வார்த்தைகளும் எண்ணங்களும் நமக்கே பகையாகிறது! காரணம் வார்த்தைகள் எண்ணங்களின் வாரிசுகள்!

பிறருக்கு நம்மை நிரூபிக்க வேண்டும் என்று வார்த்தைகளை வீச ஆரம்பிப்பதே அகந்தையை மேலும் வளர்க்கிறது. இறுதியில் அது "நான் யார் தெரியுமா?" என்பதில் போய் முடிகிறது! நம்மை நேசிப்பவர்கள் நமது மௌனத்தை கூட புரிந்து கொள்கிறார்கள்! நேசிக்காதவர்களிடம் எவ்வளவு வார்த்தைகளை பயன் படுத்தினாலும் பயனில்லை!

நம் கடமை நேசிப்பது மட்டுமே! நமது நேசத்தை பிறர் மதிக்க வேண்டும், என்ற நமது எதிர்பார்ப்பே நமக்கு மனப் பிரச்சனைகளை தருகிறது! சாயி பக்தராக இருப்பது வரம் அல்ல. தவம்! ஒவ்வொரு நொடியும் கவனத்தோடு எடுத்து வைக்க வேண்டிய தவம் அது! பூமியின் உள்ளே இருக்கும் தங்கத்தை யாரும் உரசிப் பார்ப்பதில்லை!

சாயி பக்தர்கள் பூமிக்கு வெளியே இருக்கும் தங்கங்கள்! ஆகவே பிறரிடமிருந்து உரசல் வரவே செய்யும்! அந்த உரசல் சூழ் நிலையிலும் நாம் அமைதி காத்தால், நாம் தங்கம் என்பது தெளிவாகும்! பிறருக்கும் சாயி பக்தருக்குமான வித்தியாசமே பொறுமையும் அன்புமே, அன்பு தான் நம்மை சாயி பக்தராக அடையாளம் காட்டுகிறது, அன்பே சாயி!

வாசகர் குரல்...

என் குருவிற்கு மிக்க நன்றி!

பக்குவம், பக்குவமான எழுத்துக்களால் பக்குவமாக எடுத்துச் சொல்லப்பட்ட அனுபவக் கருத்துக்கள். ஆசிரியரும், எனது குருவுமான ஸ்ரீராம் சாயிக்கு ஆயிரம் கோடி நமஸ்காரங்கள்.


– திருமதி. லதா பாஸ்கரன், அண்ணாநகர்.

இதழ் திறந்ததும் அமுதமொழியின் மூலம் கலங்கிய மனதை சாந்தமாக்குகிறார் பாபா

"எதிர்பார்ப்பு" பெட்டிச் செய்தியில் ஆன்மீகத்திற்கு சரியான பதில் கூறியிருக்கின்றார் ஆசிரியர். சத்சரிதம் மிகவும் அருமையோ அருமை. மெய்ஞானி பட்டினத்தடிகளின் பாடலைப்படித்ததும் எனது தாயின் நினைவுகள் வந்துவிட்டது. ஏழாம் ஆண்டு துவக்க விழா நிகழ்வுகளை வண்ணத்தில் கண்டதும் அகம் மகிழ்ந்தது. ஆசிரியருக்கு மிகவும் நன்றி!

– திருமதி. இந்துமதி, அயனாவரம்.

சிறுதானியம் தினை பற்றிய கட்டுரை சிறப்பு, இன்னும் அனைத்து சிறுதானியங்களையும் பற்றி எழுதுங்கள் கூடவே சிறுதானிய உணவுகள் செய்வது பற்றியும் எழுதினால் உதவியாக இருக்கும். சாய்சரிதம் மற்றும்



அனைத்து கட்டுரைகளும் அருமை.

– திரு.சிவக்குமார், திருவண்ணாமலை.

ஏழாம் ஆண்டு துவக்க விழா கட்டுரை நாங்கள் விழாவில் கலந்து கொள்ளாத குறையைத் தீர்த்தது. மிக்க நன்றி திருமதி. சாந்தி வெங்கடாச்சலம் அவர்களே!

– திருமதி. சுமித்ரா, கோவை.

ஆசிரியர் அவர்களின் புத்தகப்பணியும், அன்னதானப்

பணியும், சாயி சேவா பணியும் எங்களை ஆச்சர்யப்படவைக்கின்றன. சாயிநாதரின் மகத்துவமே மகத்துவம். சாய் மகராஜ் குருவைத் தேடி இதழ் இன்னும் மேன்மேலும் புகழ் பெற மனதார வாழ்த்துகின்றோம்.

– திரு. பழனிராஜா, குடந்தை.

இம்மாத சாயிலீலாவில் திருமதி. கிருஷ்ணவேணியின் கதை அப்படியே என் கதையைப் போலவே இருக்கின்றது. படிக்கப் படிக்க கண்களில் கண்ணீர் அருவியாகக் கொட்டியது. இது எப்படி சாத்தியம் என்று தெரியவில்லை. எனக்கும் இரண்டு பெண் குழந்தைகள். மூத்தவளுக்கு திருமணம் ஆகி விட்டது. இளையவள் கல்லூரியில் கடைசி ஆண்டு படிக்கின்றாள். ஒரே ஒரு வித்தியாசம் என் கணவர் ஒரு விபத்தில் இறந்துவிட்டார். நாங்கள் மூவரும் இன்றுவரை பாபாவின் ஆதரவில் தான் வாழ்ந்து வருகின்றோம். சொல்ல மறந்துவிட்டேன். என் பெயரும் கிருஷ்ணவேணிதான்.

– திருமதி.கிருஷ்ணவேணி. சிதம்பரம்.

தங்களின் சாய் மகராஜ் குருவைத் தேடி மாத இதழை ஆரம்பத்தில் இருந்து படித்துவருகின்றேன் சாய்ராம். மிகவும் அருமையாக இருக்கின்றது. மாதாமாதம் மெருகேறி மேலும்மேலும் சிறப்பாக வெளிவருகின்றது. இதழில் வெளிவரும் அனைத்து செய்திகளும், கட்டுரைகளும், கதைகளும் அருமையோ அருமை.

வாழ்க தங்களது இதழ்! வளர்க சாயிநாதரின் புகழ்!

– திரு. செல்வராகவன், கிருஷ்ணகிரி.

மெய்ஞானி பட்டினத்தடிகள் கட்டுரை சிறப்பு! எங்கள் பகுதியில் இன்னும் ஏராளமான சித்தர்களின் சீவசமாதி இருக்கின்றது. அவை அனைத்தையும் தங்களின் இதழில் எழுத வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். அதிதேவதை, திருவருள் தேடி, அமுத மொழி, அனைத்தும் மிக நன்று.

– திரு. கீர்த்திவாசன், திருவொற்றியூர்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 9941816692

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன், அண்ணாநகர் ரூ.3000.
செல்வி. அபர்ணா, வலங்கைமான். ரூ.3000.
திரு.முருகன்- ஜெயந்தி, அயனாவரம். ரூ.2500.
திரு.சுவாமிநாதன் பிரவீணா, கொளத்தூர். ரூ.2000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திருமதி. மீனாகுமாரி, TNSC பேங்க் மேனேஜர். அயனாவரம். ரூ.1500.
திருமதி. இராதா கணபதி, வேளச்சேரி, ரூ.1000.
திருமதி. பி. திருமலைச்செல்வி. கொளத்தூர். ரூ.1000.
திரு. சதீஷ்குமார் மகாலிங்கம், சென்னை- ரூ.1000.
ஸ்ரீ சாய் மகராஜ், சென்னை. ரூ.1000.
திரு. சக்திவேல் குடும்பத்தார். AYK ரூ.1001.
திரு.சங்கர சுப்பிரமணிய சர்மா, பாண்டிச்சேரி, ரூ. 1000.
திரு. வெங்கடாசலம், டி.நகர், ரூ.1000.

திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி, AYK, ரூ.1000.
திருமதி.ஜெயதேனிஷா ரகுபதி ராஜா, கொளத்தூர். ரூ.850.
திரு. சுடலைமுத்து, தூத்துக்குடி. ரூ.600.
திருமதி. ஜெயசித்ரா, பொள்ளாச்சி, ரூ.501.
திரு. இளங்கோ, அஸ்விதா, வேளச்சேரி. ரூ.501.
திரு. அர்ஜூன் ராதிகா, நடேசன் நகர், ரூ.500.
திரு. இராமசாமி, நடேசன் நகர். ரூ.500.
திருமதி.சாந்தி வெங்கடாசலம். மயிலை. ரூ.500.
திரு. செந்தில்குமார். செஞ்சேரிமலை. கோவை. ரூ.500.
திரு.வேணு புருஷோத்தமன், பட்டாபிராமன், ரூ.500
திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி.ரூ.500
திருமதி. நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி. ரூ.500.
திரு.கருணாமூர்த்தி.அயனாவரம். ரூ.500.
திருமதி.லலிதா, துரைப்பாக்கம், ரூ.500.
திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திரு.மோகன்குமார்.சென்னை. ரூ.501
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.400.
திருமதி. திலகம் கனி, கதிர், ரூ.300.
திருமதி. ஜானகி சீனிவாசன். கொளத்தூர். ரூ.250.
திரு. விஜயன்.மனேஜர்,சி.சி பேங்க், கொளத்தூர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட்.கொளத்தூர். ரூ.200.
திரு.சூர்யாகுமார். கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.
திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர். ரூ.101
திருமதி.கலாவதி சிவராஜ், கோவை. ரூ.100.
திரு.ஜி.தியாகராஜன். அண்ணாநகர். ரூ.100.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு.பாலசுப்பிரமணியன், சீரடி. ரூ. 108.
திரு.அகஸ்டின் குடும்பத்தார். குன்றத்தூர். அரிசி 1 மூ.
திருமதி. புவனா குடும்பத்தார். அயனாவரம். அரிசி. 1 மூ.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* **5 வருச சந்தா – ரூ.1000 (தபால் செலவு உள்பட)**
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர் 99418 16692, 88258 31068
'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

- திரு. கோவிந்தன், பொள்ளாச்சி.ரூ500
- திருமதி. லட்சுமி, நங்கநல்லூர்.ரூ.500
- திரு. விக்னேஷ், சென்னை.ரூ200
- திரு. ஜெயலட்சுமி தேவகுமார். பெரம்பூர்.ரூ.300
- திரு.வேணுகோபால்.நங்கநல்லூர். ரூ.100.
- திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068